# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

பிப்ரவரி 2008 ஜீவியம் 13 மலர் 10

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 2 |
| இம்மாதச் செய்தி | 4 |
| கண்ணுக்குத் தெரியாத லாபம் | 5 |
| லைப் டிவைன் | 8 |
| சாவித்ரி | 20 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 22 |
| அன்பர் கடிதம் | 26 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 29 |
| karmayogi.net | 35 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 37 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 42 |
| அற்புத குழந்தை | 45 |
| அறிவாக மாறும் அனுபவம் | 60 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

✡ இருப்பதை முழுவதும் போற்றினால் இல்லாததும் வரும். இருப்பவை ஏராளம். இல்லாததில்லை. உள்ளதை அறிவது உலகத்து ஞானம்.

✡ பணக்காரன் கண்ணுக்குத் தெரிவான். பக்குவமானவன் இருப்பதே தெரியாது.

✡ ஒரு வேலை செய்யும் பொழுது அடுத்த வேலை மனதில் எழுவது, ஒரு நிலையில்லை என்பதாகும்.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும், ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

11. **யானைக்கும் அடி சறுக்கும்.***

    ❊ பூனைக்கும் அடி சறுக்காது.

12. **மாமியாரை மெச்சிய மருமகளில்லை.***

    ❊ தாயைவிட அன்பான மாமியார்.

13. **பழைய குருடி, கதவைத் திறடி.**

    ❊ உடல் செய்ததையே செய்யும்.

14. **பொன்னை முடிந்தால் இருக்கும்; பொய்யை முடிந்தால் என்ன இருக்கும்?**

    ❊ நீண்ட, நெடிய பாதையே சுருக்கு வழி.

15. **தாயைத் தண்ணீர்த் துறையில் கண்டால், பெண்ணை வீட்டில் போய்ப் பார்க்க வேண்டாம்.**

    ❊ குணம் பணத்தை நிர்ணயிக்கும்.

16. **பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும்.**

    ❊ பக்தி பலனில் தெரியும்.

17. **பத்தினி 'பெய்'யெனப் பெய்யும் மழை.**

    ❊ அன்பர் அழைத்தால் அருள் வரும்.

18. **கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்.**

    ❊ யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம், நம்மையே ஏமாற்ற முடியாது.

19. **விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.**

    ❊ இறைவன் வெளிப்படாத செயலில்லை.

20. **கூண்டோடு கைலாசம்.***

    ❊ பூலோகச் சுவர்க்கம்.

தொடரும்....

❀ ❀ ❀

* In these proverbs the opposite is true in Mother.



## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனித வாழ்வு முறைப்படுத்தப்பட்டு, அம்முறைகளுக்குரிய பண்புகளால் பாதுகாக்கப்படுகிறது. இவை உயர்ந்தவை, தாழ்ந்தவைஎன்ற இரு நிலைகளிலுள்ளன. தாழ்ந்த நிலையில் மனிதன் கஷ்டப்படுகிறான். தெய்வீக வாழ்வு என்பது உயர்ந்த நிலைக்குரியது. அதிலும் உயர்ந்தது, தாழ்ந்ததுஎன்ற இரு நிலைகள் உள்ளன. தெய்வீக வாழ்வில் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் மனிதன் நஷ்டமடைவதில்லை; தண்டனை பெறுவதில் (in the physical plane) இது செயலால் நிறைந்த நிலை. உணர்வால் நிறைந்த நிலையில் இக்குறைகள் மாறும் காலத்து மட்டுமிருக்கும்.

மனித வாழ்வின் உயர்ந்த நிலைக்குச் சென்று, அங்கிருந்து தெய்வீக வாழ்வின் உயர்ந்த நிலையை அடைய முயல்வதே சிறந்தது.

***மனித சிகரத்திலிருந்து தெய்வ உச்சிக்குப் போகலாம்.***

இம்மாதச் செய்தி

**உபரி உயர்வதற்கு.**



## கண்ணுக்குத் தெரியாத லாபம்

**N.** அசோகன்

ஒரு கம்பெனி நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும்பொழுது அந்த நஷ்டத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். தவிர்க்க முடிந்த நஷ்டம் ஒரு வகை; தவிர்க்க முடியாதது மற்றொரு வகை. தவிர்க்க முடிந்த நஷ்டத்தை நாம் தவிர்க்கும்பொழுது கம்பெனி நஷ்டத்தில் இருந்து மீள்கிறது. இரண்டாம் வகை நஷ்டத்தைக் கருதும்பொழுது ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் தவிர்க்க முடியாத நஷ்டமாகக் கருதப்படுவது, அதே ஊரில் உள்ள வெற்றிகரமாக இயங்கும் மற்ற கம்பெனிகளில் தவிர்க்க முடியாததாகக் கருதப்படுவது இல்லை. செயல்பாட்டில் ஒரு நேர்த்தியைக் கொண்டு வாராதவர்களுக்கு, தமக்குப் பிடிக்காத விஷயங்கள் தவிர்க்க முடியாததாகத் தெரிகின்றன.

1990க்குப் பிறகு இந்தியாவில் நிலவும் மார்க்கெட் நிலவரத்தைக் கருதும்பொழுது எந்தக் கம்பெனியும் பண நஷ்டம் அடைய வேண்டியது இல்லை. அண்மையில் இந்திய மார்க்கெட்டில் ஒரு மந்த நிலைமை உருவாகியது. ஆனால் இந்தச் சூழ்நிலையிலும் நேர்த்தியான செயல்பாட்டைக் கற்றுக்கொண்டவர்களுக்கு நஷ்டத்தை மார்க்கெட் கொடுப்பதில்லை. தொழிலை அலட்சியம் செய்பவர்கள், நாணயமற்ற நிர்வாகியை நம்புகின்றவர்கள், கையிருப்பைக் கருதாது கொள்முதல் செய்பவர்கள், வரம்புமீறிக் கடன் வாங்கித் தொழிலுக்குச் சம்பந்தம் இல்லாத செலவு செய்பவர்கள் என்று இப்படி பல்வேறு வழிகளில் தொழிலை வீணாக்கிக்கொள்பவர்கள் உள்ளார்கள். இவர்களைப் பற்றி நான் பேசவில்லை.

தொழிலில் ஈடுபாட்டையும், சாமர்த்தியத்தையும் வளர்த்துக் கொண்டு, பணத்தை விரயம் செய்யாமல், தொழிலுக்கு உண்டான

விதிமுறைகளின்படி அவரவர் தொழிலை நடத்துபவர்கள் உள்ளார்கள். இப்படி இருக்கும்பொழுதும் ஆண்டுக் கடைசியில் 'ஏன் நஷ்டத்தைச் சந்திக்கிறோம்? ஒன்றும் புரியவில்லை' என்று குறைபட்டுக் கொள்-வார்கள். இப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன். நமக்குச் செயல்திறன் (efficiency) உண்டுஎன்று நினைப்பவர்கள் பலர் உள்ளார்கள். அத்தகைய நினைப்புதான் அவர்களை அற்றவர்-களாக ஆக்குகிறது.

இப்படிப்பட்டவர்கள் தாம் செய்கின்ற வேலையைக் கவனமாகச் செய்ய வேண்டும்என்று மிகவும் மெதுவாக வேலையைச் செய்வார்கள். எல்லா வேலைகளையும் இப்படி மெதுவாகச் செய்வதால் காலம் விரயம் ஆகிறது. காலம் விரயமாவது பணம் விரயமாவதற்கு ஒப்பாகும். மூன்று பேர் வேலை செய்யும் பிரிவில் அவசர வேலைக்குஎன்று நான்காமவர் ஒருவரைச் சேர்த்துக்கொள்வார்கள். அந்த அவசர வேலை முடிந்த பின்பும் அந்தக் கூடுதல் நபரைத் தொடர்ந்து வேலையில் இருத்திக் கொள்வார்கள். இத்தகைய பழக்கம் நாளடைவில் கம்பெனியின் எல்லாப் பிரிவுகளிலும் பரவும்பொழுது இறுதியில் தேவைக்குமேல் 25 சதவீதம் அதிகமான ஊழியர்கள் இருப்பார்கள். இப்படிக் குறைந்த பட்சம் 20 அல்லது 25 வழிகளில் நஷ்டத்தை விளைவிக்கின்ற பழக்கங்கள் பல கம்பெனிகளில் புகுந்துவிடுகின்றன. இவற்றை எல்லாம் கண்டறிந்து களைந்தால் லாபம் 2 மடங்கு அல்லது 3 மடங்கு கூட உயரும்.

லாபம்என்பது மிகவும் அத்தியாவசியமானது. லாபமின்றி எக்கம்பெனியும் இயங்க முடியாது. லாபத்தைக் கரைக்கக்கூடிய பல அம்சங்கள் எக்கம்பெனியிலும் உருவாகும். ஒரு வியாபார நிறுவனம், ஓர் உற்பத்தி ஸ்தாபனம் என்றாலும் இன்னொரு வகையில் மரியாதை தரக்கூடிய சமூக ஸ்தாபனமுமாகும். பரோபகாரம் மற்றும் சேவை என்ற இவை இரண்டும் மரியாதை தருகின்றன. பெரிய நிறுவனங்களில் இந்தப் பரோபகாரமும், சேவையும் பல வழிகளில் எழுகின்றன. இப்படி எழுகின்ற பரோபகாரமே வருகின்ற லாபத்தை



எல்லாம் கரைத்துவிடுகிறது. இத்தகைய பரோபகாரப் பழக்கங்களைக் களைந்தெடுப்பதும் சிரமமான காரியம்தான். கம்பெனி தொலைபேசி மற்றும் பேப்பரை, சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ளும் ஊழியர்கள் இருக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துவது நடைமுறையில் சாத்தியம் இல்லை. விதிமுறைகளை உருவாக்கினாலும் அவற்றை நெடுநாள் கடைப்பிடிக்க முடிவதில்லை. கறாராகக் கடைப்பிடித்தால் கொடுமை செய்வதுபோல் தெரியும். தேநீர் இடைவெளியை நீட்டித்துக்கொள்வது, அலுவலக Xerox machine போன்றவற்றைச் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துவது, வேலை நேரத்தில் அரட்டை அடிப்பது, உற்பத்தித் திறனுக்கு உண்டான விதிமுறைகளைத் தளர்த்திக்கொள்வதுஎன்று பல வழிகளில் கம்பெனியில் கட்டுப்பாடு தளர்ந்துபோகிறது. இவ்விடங்களில் கம்பெனியைச் சீர்திருத்துவதுஎன்பது விரயத்தைத் தவிர்ப்பதாகும். இதை நடைமுறையில் சாதிப்பதற்கு அறிவு விளக்கம் கொண்ட நிர்வாகக் கொள்கை தேவை.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

டிசம்பர் 5 முதல் டிசம்பர் 9 தேதி வரை, 'ஸ்ரீ அரவிந்தரால் முடியவில்லை. நீ என்ன செய்வாய்?' என்று தீய சக்திகள் வருஷம் தவறாமல் அன்னையைக் கேட்பதுண்டு. சந்தேகத்தை ஏற்படுத்துவதே தீயசக்திகளின் கடைசி ஆயுதம். அதையும் தாண்டிய நிலையில், அவை நம் தன்னம்பிக்கையை அழிக்க முயலும்.

***தீயசக்திகள் நம்பிக்கையை அழிக்கும்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVI. The Triple Status of Supermind

There is a third poise of the Supermind. Page No.147
The supporting concentration does not stand back. Para No.10
That attains it.
Instead, it inhabits it with a certain superiority to it.
Thus it follows and enjoys.
But, it projects itself into the movement.
In a way it is and is involved in it.
The character of the play will be altered.
The individual Divine would make the play.
It is a play of the relations with the universal.
It would do so predominantly.
It would do so with its other forms.
It would be the practical field of its conscious experience.

The realisation of utter unity with them is possible.
It would be a supreme accompaniment.
It would be a constant culmination of all experience.
In the higher poise unity would dominate.



## 16. சத்தியஜீவியத்தின் மூன்று கட்டங்கள்

சத்தியஜீவியத்திற்கு மூன்றாம் நிலையுண்டு.
ஆதரிக்கும் செறிவு பிரிந்து பின்னால் நிற்பதில்லை.
அதை அது அடைகிறது.
பதிலாக, அது அதனுள் ஒரு சக்தியுடன் உறைகிறது.
அப்படியே அது பின்தொடர்கிறது; அனுபவிக்கிறது.
ஆனால் சலனத்துள் அது தன்னை முன்னிருத்தி வதிகிறது.
ஒரு வகையில் அது அதுவே, அதனுள் கலந்துறைகிறது.
லீலையின் தரம் இதனால் மாறும்.
ஜீவாத்மா இந்த லீலையை நடத்தும்.
பிரபஞ்சத்துடன் உள்ள தொடர்பே லீலையாகிறது.
அதை அது மிக முக்கியமாகச் செய்கிறது.
தன் இதர ரூபங்களால் அதைச் செய்கிறது.
தான் தன்னை அறிந்து அனுபவிக்கும் நடைமுறை அரங்கமாக உலகை மாற்றும்.
பூரண ஐக்கியம் சித்திப்பது சாத்தியம்.
அதுவே அதற்கு உச்சகட்டப் பலனாகும்.
எல்லா அனுபவங்களுக்கும் முடிவாக அது நிரந்தரமாக அமையும்.
மேல்நிலைகளில் ஐக்கியம் மிச்சமாக இருக்கும்.

It would be a fundamental experience.
It would be a variation.
The variation would be a play of the unity.
This is the tertiary poise.
It will be a fundamental blissful dualism in unity.
It will no longer be a unity qualified by a subordinate dualism.

The dualism is between the individual Divine and its universal source.
All the consequences will be there.
They would accrue from the maintenance.
It will issue out of the operation of such a dualism.

The first consequence may be expected to be a lapse. Page No.148
It may be a lapse of ignorance of Avidya. Para No.11
It takes the Many for the real fact of existence.
It views the One as a cosmic sum of the Many.
But, it may not be necessary.
The individual Divine would still be conscious of itself.
It is the result of the One and its power of conscious self-creation.
Its multiple self-concentration is in Time and Space.
It governs and enjoys its manifold existence.
It enjoys manifoldly.
The true spiritual individual it is not independent.
Nor is it a separate existence.
He would not arrogate it to himself.
The differentiating movement has a truth.
He would only attain it.
Along with that is the stable unity.
They are the upper and lower poles of the same truth.



இது அடிப்படையான அனுபவமாகும்.
இது மாற்றம் எழும் வகை.
மாற்றம் எழுவது ஐக்கியத்தின் லீலை.
அது மூன்றாம் நிலை.
அது அடிப்படையில் ஆனந்தமயமான ஐக்கியத்தின் இரு நிலைகள்.
அது இரண்டாம்பட்ச, இரு நிலையான, சற்று மாறிய ஐக்கியமாக இருக்காது.
இவ்விரு நிலைகள் ஜீவாத்மாவுக்கும், அதன் பிரபஞ்ச உற்பத்தி ஸ்தானத்திற்கும் இடையேயுள்ளது.
எல்லாப் பண்புகளும் அங்கிருக்கும்.
இதை நிலைநிறுத்துவதால் அவை உண்டாகும்.
அப்படிப்பட்ட இரு நிலைகளைச் செயல்படுத்துவதால் அவை உண்டாகும்.

முதலில் ஒரு குறை ஏற்படும்என எதிர்பார்க்கலாம்.
அது அவித்தையாக இருக்கலாம்.
பலவற்றை அது வாழ்வின் நிதர்சனமாகக் கொள்ளும்.
பிரபஞ்ச ஜீவன்களின் கூடுதலான தொகையாக ஒன்றை அது கொள்ளும்.
அது அவசியமில்லை.
ஜீவாத்மா தன்னையறியும்.
அது புருஷனால் வருவது. அதனுடைய சக்தி விரும்பி எழுப்பும் சிருஷ்டியாகும்.
அதன் பல மையங்கள் காலத்திலும், இடத்திலும் உள்ளன.
அதன் பல்வகையான வாழ்வை அது நிர்வாகம் செய்து அனுபவிக்கிறது.
அப்படி அனுபவிப்பதை எல்லாக் கோணங்களிலும் அனுபவிக்கிறது.
ஆத்மாஎன்ற அளவில் அது சுதந்திரமாக இல்லை.
அது தனித்த வாழ்வையுடையதுமில்லை.
அதை தனக்கே சுவீகாரம் செய்துகொள்ளமாட்டான்.
பிரித்து வைக்கும் செயலுக்கு ஓர் உண்மையுண்டு.
அவன் அதை வலியுறுத்துவான்.
அத்துடன் நிலையான ஐக்கியம் உண்டு.
அவை ஒரே சத்தியத்தின் மேல், கீழ் முனைகள்.

It is the foundation and culmination of the same play.
There is the joy of differentiation.
There is the joy of the unity.
One is necessary for the other.

There are three poises. Page No.148
The original Truth is the same. Para No.12
There are three different ways of dealing with the same Truth.
We enjoy the Truth of existence.
We can enjoy it in many ways.
That is, the poise of the soul enjoying is different.
The delight, the Ananda would vary.
It would abide in the Truth-Consciousness.
It would abide within its status.
This is no lapse into Falsehood.
Nor is this an ignorance.
There is a primary, secondary, tertiary Supermind.
The primary Supermind holds the terms in the divine unity.
These are the terms of divine multiplicity.
They are in the other two poises.
They two develop their terms according to the terms of the primary Supermind.
Falsehood and illusion have a stigma.
There three poises are free of that stigma.
The Divine existence manifests itself.
They are the truths of a higher experience.
All these experiences are valid to it.
The Upanishads speak of them.
They are the supreme ancient authority for these truths.
They imply this validity.



ஒரே லீலையின் அடிப்படையும், முடிவும் அது.
பிரிவதில் ஆனந்தமுண்டு.
ஐக்கியத்தில் ஆனந்தமுண்டு.
ஒன்று அடுத்ததற்கு அவசியம்.

மூன்று நிலைகள் உள.
ஆரம்பச் சத்தியம் ஒன்றே.
இது ஒரே சத்தியத்தை அணுகும் மூன்று வகையின.
நாம் பிரபஞ்ச வாழ்வின் சத்தியத்தை அனுபவிக்கிறோம்.
அதை நாம் பல வகைகளில் அனுபவிக்கலாம்.
ஆத்மா அனுபவிப்பது வேறு.
ஆனந்தம் வேறுபடும்.
ஆனந்தம் சத்தியஜீவியத்திலுறைகிறது.
அதன் நிலையுள் அது வதிகிறது.
பொய் ஏற்படுவதில்லை.
இது அஞ்ஞானமுமில்லை.
முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை சத்தியஜீவியம் உண்டு.
முதல் நிலை சத்தியஜீவியம் தெய்வீக ஐக்கியத்தின் நிபந்தனைப்படி உள்ளது.
தெய்வம் பல ஜீவராசிகளாவது அந்த நிபந்தனை.
அவை அடுத்த இரு நிலைகளில் உள்ளன.
அவ்விரண்டும் தங்கள் நிபந்தனைகளை முதல் நிலையின் நிபந்தனைப்படி அமைக்கின்றது.
பொய்யும், மாயையும் விரும்பத்தக்கவையில்லை.
இம்மூன்று நிலைகட்கும் அத்தவறான பட்டமில்லை.
தெய்வீக வாழ்வு தன்னை வெளிப்படுத்தும்.
அவை உயர்ந்த அனுபவத்தின் சத்தியங்கள்.
இந்த அனுபவங்கள் அனைத்தும் அர்த்தமுள்ளவை.
உபநிஷதங்கள் அவற்றைப் பற்றிப் பேசுகின்றன.
இந்த சத்தியங்கட்கு உயர்ந்த பண்டைய அதிகாரம் உள்ளவை அவை.
உபநிஷதங்கள் இவ்வுண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.

All that we can do is to assert a priority.
It can be done to the oneness.
Oneness is prior to multiplicity.
Even this is not in Time.
This priority is in relation of consciousness.
Vedantic philosophy does not deny this priority.
It is an eternal dependence of the Many on the One.
There is the statement of supreme spiritual experience.
In Time the Many do not seem to be eternal.
They seem to manifest out of the One.
And they return to it as the source.
Their reality is denied this essence.
It can be reasoned otherwise.
There is this eternal recurrence.
It is an eternal persistence.
It is a recurrence in Time.
Or, it is in its manifestation.
It proves it is an eternal fact.
That is the multiplicity of that.
It is a fact of the Supreme beyond Time.
Multiplicity is no less than the divine unity.
This recurrence in Time is eternal.
It is inevitable.
It is so because it is eternal too.

We have several schools of philosophy. Page No.149
They are mutually destructive. Para No.13
Human mentality lays an exclusive emphasis on one aspect.
It prefers one side of spiritual experience.
It affirms that to be the sole truth.



அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதே நாம் செய்யக்கூடியது.
ஒருமைக்கு அதைச் செய்ய முடியும்.
ஒன்று, பலவற்றிற்கு முந்தையது.
இதுவும் காலத்திலில்லை.
இந்த முக்கியத்துவம் ஜீவியத்தின் தொடர்புள்ளது.
வேதாந்தம் இந்த முக்கியத்துவத்தை மறுக்கவில்லை.
பல ஒன்றைப் பற்றியதுஎன்பது என்றும் உண்மை.
உயர்ந்த ஆன்மீக ஆத்மாவைப் பற்றிய கூற்று இது.
காலத்துள் பல நிலையானவையாகத் தெரியவில்லை.
ஒன்றிலிருந்து பல உற்பத்தியாகின்றன.
மீண்டும் பல ஒன்றை நாடி வருகிறது.
அவற்றின் சத்தியத்திற்கு இந்தச் சாரமில்லை.
வேறு வகையாகப் பேசலாம்.
காலம் மீண்டும் மீண்டும் நிகழ்ச்சிகளை முடிவின்றிக் கொண்டுவரும்.
தவறாமல், முடிவில்லாமல் நடப்பது அது.
அது காலத்துள் நடப்பது.
காலத்தின் வெளிப்பாட்டில் அது உள்ளது.
அது நிலையான காலத்தைக் கடந்த உண்மையெனத் தெரிகிறது.
பல என்பது அதுவே.
காலத்தைக் கடந்த இறைவனின் உண்மையது.
தெய்வீக ஐக்கியத்தைவிட பல குறைந்ததில்லை.
காலத்துள் மீண்டும் மீண்டும் வருவது முடிவற்றது.
இது தவிர்க்க முடியாதது.
அது காலத்தைக் கடந்ததுஎன்பதால் தவிர்க்க முடியாதது.

தத்துவங்கள் பல வகையின.
ஒன்று மற்றதை அழிக்க முயல்கிறது.
மனம் ஒன்றை மட்டும் வலியுறுத்தும்.
ஆன்மீக அனுபவத்தின் ஒரு பக்கம் அதற்குப் பிடித்தமானது.
அதை மட்டும் உண்மையென அடித்துப் பேசும்.

Our mental logic is all dividing.
Stating it in terms of our logic, difficulty arises.
One side becoming eternal truth is the origin of obstacles.
Some emphasise the unitarian consciousness.
It is the play of the divine unity.
It is rendered by our mentality into difference.
It is erroneous.
We should know this is an error.
We must endeavour to correct it.
It can be done by the truth of the higher principle.
Instead, we assert that the play is the illusion.
Or, we emphasise the play of the One in the Many.
We declare a qualified unity.
So, thus, we regard the individual soul as supreme.
Rather, it is a soul-form of the Supreme.
Thus we assert this qualified existence.
We attribute eternity to it.
We deny other experience.
It is the experience of a pure consciousness.
It is an unqualified oneness.
Again we emphasise the play of the difference.
That asserts the difference between the Supreme and the human soul.
There is an experience that exceeds the difference.
Exceeding it, it abolishes the difference.
This experience is rejected.
There are exclusions and negations.
We do not have the necessity of these negations.
Each is an affirmation.
There is a truth behind each of them.
We see all these truths.



நம் மனம் எதையும் பிரித்து ஆராயும்.
அதன்படி பேச ஆரம்பித்தால் சிக்கல் எழும்.
ஒரு பக்க உண்மை முடிவானதானால் தடை எழும்.
சிலர் ஜீவியத்தை, ஐக்கியத்தை - சச்சிதானந்தத்தை - வலியுறுத்துகின்றனர்.
அது தெய்வீக ஐக்கியத்தின் லீலை.
மனம் அவ்வைக்கியத்தை வித்தியாசமாக மாற்றுகிறது.
அது தவறு.
இது தவறுஎன நாமறிய வேண்டும்.
இதைத் திருத்த முயல வேண்டும்.
உயர் தத்துவச் சத்தியப்படி இதைச் செய்யலாம்.
பதிலாக நாம் லீலையை மாயை என்கிறோம்.
சத்புருஷன் ஜீவராசிகளில் செய்யும் லீலையை நாம் வலியுறுத்துகிறோம்.
நாம் கூறும் ஐக்கியம் முழுமையானதன்று.
இதன்படி ஜீவாத்மா முடிவான உச்சகட்டமாகிறது.
ஜீவாத்மா சத்புருஷனுடைய ஆத்மீக ரூபம்.
இந்த முழுமையற்ற ஐக்கியத்தை நாம் வலியுறுத்துகிறோம்.
அது காலத்தைக் கடந்தது என்கிறோம்.
மற்றவர் கண்டதை இல்லை என்கிறோம்.
தூய ஜீவியத்தின் அனுபவம் அது.
அது குறையற்ற ஒருமை.
மீண்டும் நாம் வேறுபாட்டை லீலையில் கண்டு ஏற்கிறோம்.
அது சத்புருஷனுக்கும், ஜீவாத்மாவுக்குமுள்ள வேறுபாட்டை வலியுறுத்துகிறது.
நாம் கூறுவது மாறுபாட்டைக் கடந்தது.
கடப்பதால் மாறுபாடு அழிகிறது.
இதை மறுக்கிறார்கள்.
இவை ஒருதலைப்பட்சமானவை; மறுப்புகள்.
இந்த மறுப்பு நமக்குத் தேவையில்லை.
ஒவ்வொன்றும் அதை வலியுறுத்தும்.
அவற்றின்பின் உண்மையுண்டு.
நாம் எல்லா உண்மைகளையும் காண்கிறோம்.

At the same time, there are excesses.
It leads to a negation.
It is ill-founded.
We affirm the Absolute.
We call it That.
It has absolute absoluteness.
It is not limited by our ideas of unity.
Nor is it limited by the ideas of multiplicity.
We affirm the basis of unity.
It is the basis of the manifestation of multiplicity.
Multiplicity is the basis of returning to oneness.
There is unity in the divine manifestation.
The enjoyment of that unity is our basis.
Therefore, these discussions do not concern us.
Let us not burden ourselves with them.
It is a vain labour.
Let us not undertake it.
It will enslave us to our mental distinctions.
They deform the absolute freedom of the Divine Infinite.

*The End.*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தவறு என்பது அடுத்த உயர்ந்த நிலையில் சரி என்றாவது உண்டு. ஒரு நிலை தாழ்ந்தபோதும், தவறு, சரி என்று மாறுவதுண்டு.

***தவறு சரியாகும்; சரியானதும் தவறாகும்.***



**அதே சமயத்தில், இவை அதிகப்படியானவை.**
**அதனால் மறுப்பு எழுகிறது.**
**இது தவறான அடிப்படை.**
**நாம் பிரம்மத்தை வலியுறுத்துகிறோம்.**
**நாம் பிரம்மத்தை 'அது' என்கிறோம்.**
**அதன் பூரணம் பூரணமானது.**
**பிரம்மம் நாம் அறியும் உண்மைகளை - ஐக்கியத்தைக் - கடந்தது.**
**பல ஏற்படுவது அதைத் தடை செய்யாது.**
**அடிப்படையான உண்மையை, ஐக்கியத்தை, நாம் வற்புறுத்துகிறோம்.**
**பல சிருஷ்டியாவதற்கு அவ்வைக்கியமே ஆதாரம்.**
**பல மீண்டும் ஒருமையை நாடும்.**
**பிரிந்துள்ள சிருஷ்டியில் ஒருமையுண்டு.**
**அவ்வைக்கியத்தை அனுபவிப்பதே நம் அடிப்படை.**
**எனவே, இவர்கள் வாதம் நமக்குத் தேவையில்லை.**
**அச்சுமையை நாம் சுமக்க வேண்டாம்.**
**அது வீண் வேலை.**
**நாம் அதை ஆரம்பிக்க வேண்டாம்.**
**நம் மனக்குறைக்கு அதன் வழி நாம் அடிமையாவோம்.**
**தெய்வீக அனந்தத்தின் பூரணச் சுதந்திரம் அதனால் கறைபடும்.**

*முற்றும்.*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அகவுணர்வு சுயக்கட்டுப்பாட்டைப் பெறும்முன் முன்னேற்றத்தை விழையும்பொழுது, புறஉணர்வு அதை நோக்கி வந்து தீண்டும்பொழுது, வலி ஏற்படுகிறது.

***அகவாழ்வு வலியை வரமாகப் புறவாழ்வைக் கேட்கிறது.***

## P.81 His being towered into pathless heights.

**அவனது ஜீவன் கோபுரமாக வளர்ந்தது.**

- ✡ மனித காய வஸ்த்ரமிழந்த நிர்வாணம்.
- ✡ துணியுடுத்தாத தூய்மையில் அவனைச் சந்திக்க விழைந்து,
- ✡ பலமான பவித்ரம் பாய்ந்து இறங்கியது. எரியும் நெருப்பு, எடுப்பான வலிமை.
- ✡ மரணமிலாப் பார்வையில் அரைகுறையாக எழும் அழகின் அற்புதம்.
- ✡ கடுமையான இனிமை, வலியெழும் பூரிப்பு.
- ✡ பெருவலிமையின் பேராதரவு சூழ்ந்தது.
- ✡ மனமும், உணர்வும், இதயமும் ஊடுருவப்பட்டன.
- ✡ உச்சஸ்தாயின் புல்லரிப்பு தாங்க முடியாத மயக்கம்.
- ✡ புலப்படாத பிடியில் சுபாவம் சுருண்டு துவண்டது.
- ✡ மரணத்தைவிடச் சிறிய, காலத்தைவிட நீண்ட தருணம்.
- ✡ அன்பைவிடக் கடுமையான சக்தி, மோட்சத்தைவிட ஆனந்தம் தருவது.
- ✡ அனந்தனின் ஆதரவு, அரசனின் அரவணைப்பு.
- ✡ பூரண ஆனந்தம் வலை வீசிப் பிடித்து, கசக்கிப் பிழிந்தது.
- ✡ ஆனந்த சக்தியின் சூறாவளிச் சூழல்.
- ✡ கற்பனையைக் கடந்த ஆழத்தை அவசரமாக எட்டியது.
- ✡ கணக்கிலடங்கா உயரத்திற்குத் தூக்கிப் பிடித்தது.
- ✡ மரணப் பிடியினின்று அதைக் கிழித்தெடுத்தது.
- ✡ கரை கடந்த மாறுதல் கணக்கிலடங்காப் புதுமை.
- ✡ பார்வையும், எண்ணமுமற்ற சர்வ ஞானம் சித்தி பெற்றது.
- ✡ உலகை உட்கொள்ளும் புதிரான ரூபம்.



- ✡ ஒரு மனிதஇதயம் அதன் பாசமான பாசறை.
- ✡ தனிமையில் வாடுபவனை இழுத்துப்போட்டது.
- ✡ இறைவனின் அரவணைப்பில் இழுத்துப்போட்டது.
- ✡ காலத்தைக் கடந்த பார்வை நேரத்தைக் கரைக்கிறது.
- ✡ செயலையும், கருவியையும் சேர்த்து அழிக்கிறது.
- ✡ அகன்று, தூய்மையாய், வெற்றிடமாக ஆத்மா மிளிர்ந்தது.
- ✡ விழிப்புற்ற மனம் வெற்றுப் பலகை.
- ✡ வெற்றுப் பலகையில் பிரபஞ்சமும், பிரம்மமும் எழுதலாம்.
- ✡ அஞ்ஞானத்திலமிழ்ந்த நம் ஜீவியம் அழித்தெடுத்த பாங்கு.
- ✡ பாரம் நீங்க மறந்த சுமை.
- ✡ கடந்த சிறுமைகளை உணவாக உட்கொண்டது.
- ✡ தெய்வ உடலென்ற கனல்.
- ✡ புதிய பிறவியின் பெருவாழ்வுக்குரிய பேரவை.
- ✡ உணர்ச்சியின் உரிமையை உடைத்த காலத்தைக் கடந்தது.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்குயர இலட்சியம் உதவும். உயர்ந்தபின் அந்நிலையில் நிரந்தரமாக நிற்க (pragmatism) யதார்த்தவாதம் உதவும்.

***இருப்பதை விட்டு இல்லாத உயர்வை நாடுவது இலட்சியவாதம். இருப்பதன் உயர்வையும், அவசியத்தையும் பாராட்டுவது யதார்த்தவாதம்.***

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(டிசம்பர் 2007 இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**141.** முதல், டெக்னாலஜி, உழைப்பு ஆகியவை எப்படி வருமானத்தை உண்டு பண்ண உதவுகின்றனவோ, அப்படி பண்புகளும் வருமானத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். நன்கு சம்பாதிக்கும் நிறுவனங்கள் பண்புகளைக் கடைப்பிடிப்பதில் தீவிரமாக இருப்பதைப் பார்க்கலாம்.

**142.** மாறாக நஷ்டத்தில் மூழ்கும் கம்பெனிகள் பண்புகளைக் கடைப்பிடிப்பதில் தீவிரமில்லாமல் இருப்பதையும் பார்க்கிறோம்.

**143.** பெரிய நிறுவனங்கள்கூட இப்பொழுது வாடிக்கையாளர்களுக்கு காத்திராமல், வாடிக்கையாளர்களைத் தேடிப்போவது, தம்முடைய வியாபாரத்தை எப்படியாவது பெருக்க வேண்டும்என்ற கவலை அவர்களுக்கு வந்துவிட்டதைக் காட்டுகிறது.

**144.** அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டால்தான் நிறுவனங்கள் வளர முடியும். நிறுவனத்தைத் தோற்றுவித்தவர் தம் கையிலேயே எல்லா அதிகாரங்களையும் வைத்திருந்தால், நிறுவனம் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி இருக்கும். ஆனால், வளர்ச்சி இருக்காது.

**145.** விட்டுக் கொடுத்து உறவாடுவது நிர்வாகத்திற்கும், ஊழியர்களுக்கும் இடையே சுமுகத்தைத் தக்கவைக்கும். சுமுகம் கெட்ட இடங்களில் எல்லாம் அப்படி விட்டுக்கொடுத்து பழகுவது இல்லாதிருப்பதைப் பார்க்கலாம்.

**146.** பாலிஸி விஷயங்களில் முடிவெடுக்கின்றவர்கள் வேலையின் விவரங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள ஆர்வம் காட்டலாம். ஆனால், அவ்வாறு



செய்வது அவர்களுடைய நேரம் மற்றும் எனர்ஜி வீணாவதையே குறிக்கும்.

**147.** பங்குச் சந்தையில் பங்குகளை வைத்து விளையாடுவதில் சௌகரியங்களும் உண்டு; அசௌகரியங்களும் உண்டு. பங்குச் சந்தையில் செயற்கையாகப் பங்குகளின் மதிப்பு உயர்வதும், பின்பு வீழ்வதும் பங்குச் சந்தையின் பலகீனங்களைக் காட்டுகிறது.

**148.** மேலை நாட்டுத் தனிநபர் கலாச்சாரம் ஒன்றுதான் சுபிட்சத்திற்கு வழி என்று இல்லை. ஜப்பானியர் இதே சுபிட்சத்தைக் கூட்டுக் கலாச்சாரத்தின் மூலமும் பார்த்துள்ளனர்.

**149.** கலாச்சாரக் கட்டுப்பாடுகள் சுபிட்சம் வருவதைத் தாமதப்படுத்துவதாகத் தெரியலாம். ஆனால், அந்தக் கலாச்சாரக் கட்டுப்பாடுகளை மதிக்கின்றவர்கள் இந்தப் பாதிப்பைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

**150.** பிழைத்தால் போதும்என்ற நிலை இருப்பதைக் காப்பாற்றிக்கொள்வது ஆகும். வளர்ச்சிஎன்பது இருக்கின்ற நிலையிலேயே அபிவிருத்தி அடைவதாகும். முன்னேற்றம்என்பது அடுத்த உயர் நிலைக்குச் செல்வது ஆகும். பரிணாம வளர்ச்சிஎன்பது நிலை பல மடங்குகள் உயர்வதாகும்.

**151.** வருமானம் குறைந்தவர்களை ஏழைஎன்றும், வருமானம் மிகுந்தவர்களை பணக்காரர்கள்என்றும் சொல்கிறோம். ஆனால், வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் இருந்து பார்த்தால் உற்பத்தித் திறன் குறைந்தவர்களை நாம் ஏழைஎன்றும், உற்பத்தித் திறன் மிகுந்தவர்களைப் பணக்காரர்கள் என்றும் சொல்கிறோம்.

**152.** மானிடச் சரித்திரத்தின் ஆரம்ப நாட்களில் குருமார்களும், பாதிரியார்களும் ஆதிக்கம் செய்தது மதத்தின் கை மேலோங்கி இருந்ததைக் காட்டுகிறது. இரண்டாவதாக, அரசர்களும், பிரபுக்களும் ஆதிக்கத்தில் இருந்தது அரசியல் அதிகாரம் ஓங்கி இருந்ததைக் குறிக்கிறது. தொழில் புரட்சி, உலகத்தில் பரவிய காலத்தில் முதலாளிகளின் கை ஓங்கி இருந்தது பண பலத்தைக் காட்டுகிறது. ஜனநாயகம் இப்பொழுது

சாதாரணக் குடிமக்களை அதிகாரம் படைத்தவர்களாக மாற்றி உள்ளது. ஆனால், ஏற்கனவே ஆதிக்கத்தில் இருந்த மேற்கண்ட மூன்று பிரிவினரைப்போல இவர்களுடைய ஆதிக்கமும் ஒரு காலத்தில் முடிவுக்கு வரும். ஏனென்றால், இந்த நான்கு விதமான அதிகாரங்களும் அடிப்படையில் நிலையில்லாதவை. நிலையான, முறையான சமூக அமைப்பு வேண்டுமென்றால், அது சத்தியஜீவிய யுகத்தில்தான் அமையும்.

**153.** மானிட ஒற்றுமைஎன்பது உண்மையான மனமாற்றத்திற்குதான் பரிசாகக் கிடைக்கும். மனமாற்றத்தைக் கொண்டுவாராமல் சமூகத்தைச் சீர்திருத்த வெளியிலிருந்து எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறாதுஎன்பது அன்னையின் கருத்தாகும்.

**154.** முன்னேற்றத்திற்காக எடுக்கும் முயற்சியிலிருந்து கிடைக்கும் இன்பம் ஓய்வெடுப்பது மற்றும் இருப்பதைக் காப்பாற்றிக்கொள்வது ஆகியவற்றில் இருந்து கிடைக்கும் இன்பத்தைவிட அதிகமானதாகும்.

**155.** துணிச்சலாகச் செயல்படுகின்றவர்களுக்குத்தான் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. பாதுகாப்பை நாடுபவர்கள் பத்திரமாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு முன்னேற்றம் குறைவுதான்.

**156.** நாம் எந்த வேலையை அனுபவித்துச் செய்கிறோமோ, அந்த வேலையில் நாம் சாதிக்கிறோம். அப்படி அனுபவித்துச் செய்யாத வேலையில் சாதிப்பது கடினம்.

**157.** சம்பாதிப்பதற்காக வேலை செய்பவர்கள் ஆரம்ப நிலையில் உள்ளார்கள். தம்முடைய உற்பத்தித் திறனை வெளிப்படுத்துவதற்காக வேலை செய்பவர்கள் அடுத்த உயர் நிலையில் உள்ளார்கள். தம்முடைய படைக்கும் திறனை வேலை மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றவர்கள் வேலையின் உயர்ந்த அம்சத்தோடு தொடர்புக்கொள்கிறார்கள்.

**158.** உடல் உழைப்புக்கான பலன் குறைவு. அறிவால் உழைப்பவர்களுக்கு பலன் அதிகமாகக் கிடைக்கும். ஆன்மீக உழைப்பிற்கு இதைவிட



அதிகப் பலன்கள் உண்டு. ஆனால், ஒரு சிலர்தாம் ஆன்மீக முயற்சிகளை எடுக்க முன்வருகிறார்கள்.

**159.** அதிகாரமும், பொறுப்பும் சேர்ந்தேதான் வரும். அதிகாரம் செலுத்துவதை விட, பொறுப்பை நிறைவேற்றுபவர்கள் சாதிப்பார்கள். பொறுப்பை மறந்து, அதிகாரம் செலுத்துவதிலேயே குறியாக இருப்பவர்கள் அந்த அளவுக்குக் குறைவாகவே சாதிப்பார்கள்.

**160.** ஈடுபாட்டுடன் வேலை செய்பவர்களுக்கு நேரம் போவது தெரியாது. அடிக்கடி கடிகாரத்தைப் பார்க்கின்றவர்கள் வேலையில் ஈடுபாடு இல்லாதவர்கள் என்றாகிறது.

தொடரும்.....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பணம், சுயநலம், பொய், வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. உண்மையில் இவற்றை விட்டுவிட முயல்பவர்கள் சில சமயங்களில் பிறருக்காக இவற்றை நாடுகிறார்கள். பிறருக்காகஎன்று நினைத்தாலும், உண்மையில் தம் ஜீவனின் ஆழத்தில் தமக்காகவே இவற்றை நாடுகிறார்கள்.

நாம் (surface mind) விட்டுவிட்ட பண்புகளை நம் ஜீவனின் ஆழ்ந்த பகுதிகள் பிறருக்காகஎன்று சாக்குச் சொல்லி பின்பற்ற முயலும்.

***பிறருக்குஎன்பது பிறருக்காக, செய்வனவெல்லாம் தமக்காகவே.***

## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

நான் அரசாங்க உத்யோகத்தில் வேலை செய்கிறேன். நான் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர். 21-3-07 அன்று அலுவலகத்தில் கடிதம் வாங்கும் அன்பர் பணிக்கு வாராததால், அன்று எல்லாத் தபால்களும், கோப்புகளும் பணியின் அவசியத்தைக் கருத்தில்கொண்டு நான் வாங்கினேன். கல்வித் துறையில் இருந்து ஒரு கோப்பு பெறப்பட்டு, அலுவலக மேலாளரிடம் கோப்புபற்றி விவரித்துப் பேசினேன். அக்கோப்பில் 50 சத்துணவு மையங்களுக்கு LPG gas connection மேடை அமைக்கும் பணிக்காக ரூ.10,00,000/- காசோலையுடன் பெறப்பட்டது. நான் மேலாளரிடம் காண்பித்துவிட்டு, அன்றைய பணியில் சேர்ந்த ஒருவரிடம் தபாலில் entry போடுமாறு கூறிவிட்டுச் சென்றேன். அன்று மாலை 4 மணியளவில் கோப்பு காணவில்லை. அன்னையின் பக்தர் ஒருவரிடம் இதைப்பற்றி அழுதுகொண்டே பஸ்ஸில் பேசினேன். மாம்பலத்தில் உள்ள தியான மையத்திற்குச் சென்று காணிக்கை செலுத்தி, அன்னையிடம் சமர்ப்பித்தேன். மறுநாள் அன்றைக்கு எந்தெந்த துறை தபாலுக்கு வந்ததோ, அங்கு எல்லாம் சென்று பார்த்தனர். புதிதாகப் பணியில் சேர்ந்தவரும், மேலாளரும் ஃபைலைத் தேடிச் சென்றனர். அலுவலர் அனைத்து பீரோக்களிலும் தேடச் சொன்னார். மறுபடியும் தியான மையம் சென்று எனது மனக்குழப்பத்தைத் தெரிவித்தேன். எனக்கு எப்படி பிரார்த்தனை பண்ணவேண்டும்என்று தெரியாது. அப்போது, தியான மையத்தில், ''பிரச்சினையை உன்னிடத்தில் வைத்துக்கொண்டு இருக்கிறாய். அன்னையிடம் விட்டுவிடவும்'' என்றனர். மேலும் சுந்தரம் CIT நகரில் இருக்கும் தியான மையத்திற்குப் போக சொன்னார்கள். அங்கேயும் பிரார்த்தனை பண்ணினேன். ''அன்னை எத்தனையோ பேர்களுக்கு நல்லது செய்து இருக்கிறார். கவலைப்படவேண்டாம்'' என்று கூறினர். என்னுடைய தோழியும், தினந்தோறும், ''கோப்பு கிடைத்ததா?'' என்று கேட்டுக்கொண்டே இருப்பார். என் தாயாரும் காலபைரவருக்கு வேண்டிகொண்டு, இரும்பைத் தண்ணீரில் போட்டு, மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீரை மாற்றச் சொன்னார்கள். யார், எது சொன்னாலும் அன்னை கூறுவதாக நினைப்பேன். இப்படியாக 26 நாட்கள் ஓடிவிட்டன. ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாக இருந்தது; வீட்டில் குழந்தைகளைப் பார்க்க முடியவில்லை; சமையல் செய்ய முடியவில்லை; எப்பொழுதும் கோபமாக இருந்தது. 16-4-07 அன்று அன்னையிடம் 'இன்று வாழ்வா, சாவா?' என்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டேன். இதற்கிடையில் இரு தினங்களுக்கு முன்னால் அனைத்துத் துறைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. 16-4-07 அன்று காலை அலுவலகத்திற்கு வந்துசேர்ந்தேன். இங்குதான் அன்னையின் miracle ஒன்று நடந்தது. குழப்பமான சூழலில் மனம் தியானத்தைகூட மேற்கொள்ள முடியவில்லை. அன்று அன்னையின் புத்தகத்தைத் தரும் என் தோழி அலுவலகத்திற்கு வந்தார். ''ஏன் இன்னும் கோப்பு கிடைக்கவில்லை? எங்கோ தவறு நடந்து இருக்கிறது. உன் ஆழ்மனத்தில் கோப்பைப் பற்றி நினைவு இருக்கிறது. இதுவே ஒரு தடையாகும்'' என்றார். அவள் உடனே Sunshade என்று சொல்லச் சொன்னார்கள். எப்படி பிரார்த்தனை செய்வது என்பது பற்றியும் சொன்னார். என்னுடைய உள்மனத்திலிருந்து நினைவை நீக்கி, அன்னையிடம் சமர்ப்பணம் செய்தேன். நான் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது சுமார் 2½ மணி இருக்கும். என் சக ஊழியர் ''மேடம், கோப்பு கிடைத்துவிட்டது'' என்று கூறினார். எனது அலுவலகம் இரண்டாவது மாடியில் உள்ளது. முதல் தளத்தில் இருந்து கோப்பு கிடைத்தது. Sunshade என்ற சொல்லுக்கு அர்த்தம் புரிந்தது. கண்ணீர் மல்க ஆனந்தக் கண்ணீருடன் அன்னைக்குக் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிகழ்ச்சி-

யிலிருந்து அன்னை எனக்கு ஒரு பாடம் சொல்லியிருக்கிறார். 'உனக்குத் தேவையில்லாத வேலையைச் செய்யக்கூடாதுஎன்றும், பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டாம்என்றும்' அறிவுறுத்தப்பட்டது. அன்னை என் மனதில் உள்ளதை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக்கொண்டு, பல அற்புதங்களை நிகழ்த்திக்கொண்டு இருக்கிறார்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

குடும்பத் தலைவர் கட்டுப்பாட்டை வலியுறுத்தாவிட்டால், குடும்பம் உருவாகாது. கட்டுப்பாடுஎனும் குடும்பப் பண்பைக் குலைக்க, குடும்ப முக்கியஸ்தர் முனைந்தால், எந்தக் குடும்பமும் அதிக நாள் நீடிக்காது. உயர்ந்த குடும்பம், தாழ்ந்த குடும்பத்தில் சம்பந்தம் செய்தால் இந்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட குடும்பங்கள் உடையாமலிருக்கும் அதிசயத்தை அன்னையின் அருளில் காணலாம்.

***தாழ்ந்த சம்பந்தம் குடும்பத்தை அழிக்கும்.***

***அதையும் காக்கும் அதிசயம் அன்னையின் அருள்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**அருள் அதிகரிக்கும்பொழுது அறியாமையும் அதிகரிக்கின்றது.**

**ஏதோ ஒரு நிலையில் அருளும் அறியாமையும் ஒன்றல்லவா?**



# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N.** அசோகன்

சாதிக்கும் முறையென்னஎன்று நாம் பார்த்துவிட்டோம். இப்பொழுது சாதனைக்கு உதவும் முக்கியப் பண்புகளைப் பற்றிப் பார்ப்போம். சாதனையை விரைவுபடுத்தும் பண்புகள் நிறைய இருந்தாலும், முக்கியமான பத்து பண்புகளைமட்டும் நான் இங்கு எடுத்துக்கொள்கிறேன். அவையாவன: கடின உழைப்பு, அறிவு மற்றும் திறமை, ரிஸ்க் எடுக்கும் துணிவு, விடாமுயற்சி, தைரியம், resourcefulness, அதாவது சமயோசித திறமை, ஆர்வம், ஆர்கனைஷேஷன், சுமுகம் மற்றும் ஏற்புத்திறனாகும்.

நானொரு பத்து பண்புகள் சாதனைக்கு உதவும் என்று சொல்கிறேன் என்றாலும், பல பேரும், பல நிறுவனங்களும் ஒரு குறிப்பிட்ட பண்பை உச்சக்கட்டத்திற்கு வளர்த்து, அதன் சிறப்பை வைத்து சாதிக்கின்றார்கள். தி.மு.க. 1967இல் ஆட்சியைப் பிடித்ததற்கு முக்கிய காரணமே தி.மு.க. தலைவர்களின் சிறந்த பேச்சாற்றல்தான். ஹிட்லரும், ஜெர்மானிய விமானப்படையும் இங்கிலாந்தை தாக்கிய பொழுது, அவர்களை எதிர்க்க இங்கிலாந்து மக்களை ஊக்குவிக்க இங்கிலாந்துப் பிரதமர் சர்ச்சில் அவர்கள் தம்முடைய சிறந்த பேச்சாற்றலைத்தான் பயன்படுத்தினார். அவருக்கு அந்த நேரம் சிறந்தவொரு பேச்சாற்றல் இல்லாமல் போயிருந்தால், இங்கிலாந்து மக்கள் அவ்வளவு உற்சாகமாகவும், தைரியமாகவும் ஜெர்மனியை எதிர்த்திருப்பார்கள்என்று சொல்ல முடியாது.

கோகோ கோலா கம்பெனி soft drink துறையில் முன்னணியில் இருப்பதற்குக் காரணம் அதனுடைய product qualityதான். இந்தியாவில் அதன் தரம் குறைந்துவிட்டதாக complaint

எழுந்தாலும் உலகரீதியாகப் பார்க்கும்பொழுது இக்கம்பெனி இன்னும் முன்னணியில் தான் நிற்கிறது. சரவணபவன் ஓட்டல்கள் சென்னையில் பாப்புலராக இருப்பதற்கு முக்கியக் காரணம் அவ்வோட்டல்களில் காணப்படும் சுத்தமாகும். சுத்தமென்ற பண்பை அவர்கள் உச்சக்கட்டத்திற்கு வளர்த்துள்ளார்கள். Federal எக்ஸ்பிரஸ் என்ற courier கம்பெனி அமெரிக்காவில் முதன்மை இடத்திலிருக்கிறது. On-time delivery என்ற பண்பை அவர்கள் சிறப்பாகப் போற்றி நடைமுறையில் கடைபிடிப்பதால் இந்த முதன்மை நிலை அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

இப்படி ஒரு பண்பை உச்சக்கட்டத்திற்கு வளர்த்து, நம்மால் சாதிக்க முடியுமென்றாலும், பொதுவாக நாம் எல்லாப் பண்புகளையும் வளர்த்துக்கொள்வதற்கான முயற்சியை எடுப்பது நல்லது.

**கடின உழைப்பு:**

சாதிப்பதற்குத் தேவையான முதல் குவாலிட்டி கடின உழைப்பு என்று தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன். Common-sense கண்ணோட்டத்தில் பார்த்தால்கூட இவ்வுண்மை விளங்கும். கடின உழைப்பு அவசியம்என்று பலபேருக்குத் தெரிந்தாலும், ஏன் அவசியம் என்று கேட்க பலபேருக்குத் தோன்றுவதில்லை. நாம் physical planeஇல் வாழ்வதால் கடின உழைப்பு அவசியமாகிறது. இந்தக் குறிப்பிட்ட physical planeஐ நகர்த்துவதோ, அதிலொரு தாக்கத்தை உண்டுபண்ணுவதோ கடினமான காரியம். மேலும், இந்த plane ஒரு resultஐக் கொடுப்பதிலும் தாமதத்தை ஏற்படுத்தும். இக்காரணங்களால்தான் இந்த physical planeஇல் சாதிப்பதற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டியதாகியுள்ளது. நாம் ஆன்மீக நிலையிலோ, அறிவு நிலையிலோ மற்றும் உணர்வு நிலையிலோ செயல்படும்பொழுது சாதிப்பது இவ்வளவு கடினமாகவோ, அல்லது காலதாமதமாகவோ இருப்பதில்லை. நாம் அன்னைக்குப் பிரார்த்தனை செய்யும்பொழுது அவருடைய ஆன்மீக சக்தி செயல்படுகிறது. அன்னையிடம் வேலை



வேண்டுமென்று பிரார்த்தனை செய்த மறுநாளே நல்ல வேலை கிடைத்த அனுபவம் பல அன்பர்களுக்கு உண்டு. இப்படி அன்னைக்குப் பிரார்த்தனை செய்யாமல் தம் சொந்த முயற்சியால் வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்க பல மாதங்களாகலாம். Physical planeஇல் பல மாதங்கள் கழித்துக் கிடைக்கக்கூடிய ஒரு பலனை பிரார்த்தனைஎன்ற ஒரு ஆன்மீக அணுகுமுறை ஒரு நாளிலேயே கொடுத்துவிடுகிறது.

அரசாங்கத்தில் கிளார்க் வேலையில் தம் 25ஆவது வயதில் சேர்பவர் ஆபீஸர் ஆவதற்குள் ரிட்டையராகும் வயது வந்துவிடும். அறிவு குறைவாக இருக்கும்பொழுது உடலுழைப்பை நம்பி செயல்பட வேண்டியிருப்பதால் அதிகாரியாவதற்கு இப்படி 30 வருடமாகிறது. ஆனால், அறிவாளியான இளைஞர் நேரடியாக தன்னறிவு பலத்தை பயன்படுத்தி I.A.S. பரிட்சை எழுதி, தம்முடைய 25ஆவது வயதிலேயே அதிகாரியாக வந்துவிடுகிறார். 35 வருட உடலுழைப்பு தரும் பலனை அறிவு ஒரு பரீட்சை எழுதியவுடன் தந்துவிடுகிறது. நாமொரு ஈடுபாட்டுடன் உற்சாகமாக வேலை செய்யும்பொழுது பல நாள் வேலை சில நாட்களில் முடிவதைக் காண்கிறோம். உற்சாகம் இல்லாமல் வெறுங்கடமைக்காக வேலை செய்யும்பொழுது வெறும் உடம்பு மட்டும் வேலை செய்கிறது. அதனால் காலதாமதமாகிறது. நம்முடைய உற்சாகம் தூண்டிவிடப்பட்டுள்ளபொழுது அதனுடைய எனர்ஜியும் நம் வேலைக்குப் பயன்படுவதால் வேலை விரைவு பெறுகிறது. பலனும் விரைவில் கிடைக்கிறது.

பொதுவாகப் பார்க்கும்பொழுது நம் வாழ்க்கை பிஸிக்கலாக இருப்பதால் சாதிப்பதற்குக் கடினவுழைப்பு அவசியம் தேவைஎன்பது நிரூபணமாகிறது. விவசாயமாகவோ, வியாபாரமாகவோ, டாக்டர், வக்கீல், ஆசிரியர் போன்ற professional பணிகளாகவோ மற்றும் சங்கீதம், நடிப்பு, ஓவியம், இலக்கியம்என்று கலைத்துறை சம்பந்தப்பட்ட வேலையென்று, எந்த வேலையாகவிருந்தாலும், அடிப்படையில் இவையெல்லாம் physical planeஇல் நடக்கின்ற வேலையாக

இருப்பதால், கடினமாக உழைத்தால்தான் சாதிக்க முடியும் என்றாகிறது.

அமெரிக்க விஞ்ஞானி தாமஸ் எடிசன் தம்முடைய கண்டுபிடிப்புகளைப்பற்றிப் பேசும்பொழுது, ''creativityஎன்பது ஒரு சதவீதம் உள்ளெழுச்சி, மற்றும் 99% உடலுழைப்புதான்'' என்று குறிப்பிட்டு உள்ளார். கம்யூனிஸம்என்ற புரட்சிகரமான பொருளாதாரக் கொள்கையை உலகிற்கு அளித்தவர் கார்ல் மார்க்ஸ். ஆனால், இவ்வுண்மையை நிரூபிக்க ஆதாரங்கள் தேடும்பொருட்டு மார்க்ஸ் அவர்கள் பதினெட்டு வருடங்கள் லண்டனிலுள்ள British Museum நூல் நிலையத்தில் படித்து, ஆராய்ச்சிசெய்து, புள்ளி விவரங்கள் சேகரித்தார்.

ஆகவே, கடினவுழைப்பு தேவையா என்பது பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம். ஏன் சிலரால் கடினமாக உழைக்க முடிகிறது? ஏன் சிலரால் அப்படி உழைக்க முடிவதில்லை? என்றொரு கேள்வி எழுகிறது. மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்கள் கடினவுழைப்பாளிகளாகவும், ஆரோக்கியம் இல்லாதவர்கள் சோம்பேறிகளாகவும் இருப்பார்கள்என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால், இது மட்டுந்தான் உண்மைஎன்று சொல்ல முடியாது. நல்ல தேக ஆரோக்கியம் படைத்தவர்களும் வேலையில் நாட்டமில்லாமல் சோம்பேறிகளாக இருப்பதுண்டு. அதை வைத்துப் பார்க்கும்பொழுது, கடினவுழைப்பிற்குக் காரணம் வேறுஎன்று தெரிகிறது. தாம் செய்கின்ற வேலையில் ஓர் ஈடுபாட்டையும், உற்சாகத்தையும் வெளிப்படுத்துகின்றவர்களாலும், சாதிப்பதில் ஆர்வமுள்ளவர்களாலும், அதற்கேற்ற கடினவுழைப்பை வழங்க முடிகிறது. செய்கின்ற வேலையில் ஈடுபாடு இல்லை, சாதிப்பதில் ஆர்வமில்லைஎன்பவர்களால் கடினமாக உழைக்க முடியாமல் போய் விடுகிறது.

பிஸினஸ் செய்கின்ற ஒருவருக்கு, அவருடைய தொழிலில் ஈடுபாடும், சாதிப்பதில் ஆர்வமுமிருக்கும்பொழுது, அவரால் வழக்கத்தைவிட அதிக நேரம் வேலைக்காகச் செலவு செய்ய முடிகிறது. தேவைப்பட்டால், night shiftற்குகூட வரமுடிகிறது. நீண்ட தூர பயணத்திற்கு உண்டான உடல் தெம்பை அந்த ஈடுபாடு கொடுக்கிறது. உணவு இடைவேளை தாமதப்பட்டாலும் அந்த தாமதத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடிகிறது. விடுமுறை நாட்களில் வேலை செய்ய வேண்டுமென்ற அவசியம் வந்தாலும் அவரால் வேலை செய்ய முடிகிறது.

ஈடுபாடில்லாமல் வேலை செய்யும்பொழுது அப்படிப்பட்டவருக்கு office time முடிந்தவுடனேயே வீட்டிற்குப் போகத் தோன்றுகிறது. நீண்ட தூர பயணமென்றால் உடல் ஒத்துழைக்க மறுக்கிறது. உணவு இடைவேளை தாமதப்பட்டால் எரிச்சல் வருகிறது. விடுமுறை நாளில் வேலைக்குக் கூப்பிட்டால், மனைவி, மக்களுடன் இருக்க முடியவில்லையேஎன்ற வருத்தம் வருகிறது.

வேலையில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு இவையெல்லாம் தடைகளாக வரவில்லைஎன்னும்பொழுது, உற்சாகமும், ஆர்வமும்தான் கடின உழைப்பிற்குக் காரணமாகவுள்ளனஎன்று சொல்லத் தோன்றுகிறது. இந்த உற்சாகமும், ஆர்வமும் இல்லாதவர்கள் சோம்பேறிகளாக இருந்துவிடுகிறார்கள்என்றாகிறது.

பொதுவாகப் பார்த்தால், மனிதச் சுபாவத்தில் உழைப்பின்மேல் அதிக நாட்டமில்லைஎன்றுதான் சொல்ல வேண்டும். மனிதர்களை அவர்கள் இஷ்டத்திற்குவிட்டால், எவ்வளவு குறைந்தபட்சம் வேலை செய்ய முடியுமோ, அவ்வளவு வேலைதான் செய்வார்கள். வாழ்க்கை நம்மை வேலை செய்யும்படிக் கட்டாயப்படுத்துகிறது. ஏனென்றால், சம்பாதிக்கவில்லையென்றால், நம்முடைய சாப்பாட்டிற்கே வழியில்லை என்றாகி விடும். இப்படி வேலை, சம்பாத்தியம் மற்றும் சாப்பாடு ஆகிய மூன்றும் சம்பந்தப்பட்டிருப்பதால்தான் பெரும்பாலோர் வேலை செய்ய முன் வருகின்றார்கள். அப்படி முன்வருகின்றவர்களும் 9.00 to 5.00 அல்லது 10.00 to 5.00 என்று தம்முடைய work scheduleஐ நிறுத்திக்கொள்கிறார்கள். இப்படி நிறுத்திக்கொள்வது நமக்கு பல

வகைகளில் சௌகர்யமாக இருக்கலாம். ஆனால், இறுதியில் நமக்கு கிடைக்கும் பலனும் அளவாகத்தானிருக்கும்.

அன்னை மிகவும் கடினவுழைப்பாளிஎன்று பெயர் வாங்கியவர். இரவில் அவர் 2 அல்லது 3 மணி நேரத்திற்குமேல் தூங்கியதில்லை. ஆசிரமவாசிகள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்காக பகவான் இரவில் தினந்தோறும் 12 மணிக்கு மேல் வரை விழித்து இருந்து எழுதுவாராம். இதை அவர் சுமார் 20 வருடங்கள் செய்தார். அன்னை தம்முடைய அறிவுரைகள் ஒன்றில், ‘‘உங்களால் அதிகபட்சம் என்ன முடியுமோ அதைச் செய்யுங்கள். அது கடினமாக இருந்தாலும் பரவாயில்லை’’ என்று சொல்லியிருக்கின்றார். கடின உழைப்பிற்கு நாம் முன் வாராமல் கடினமான காரியங்களைச் சாதிக்க முடியாது.

கடந்த இரண்டு வருடமாக கர்மயோகி அவர்கள் தம்முடைய கட்டுரைகளில் அன்னை அன்பர்கள் தம்முடைய மாத வருமானத்தை லட்ச ரூபாய்க்கு உயர்த்திக்கொள்ளலாமென்று எழுதிக்கொண்டு வருகிறார். இந்த வருமானம் 9.00 to 5.00 work scheduleஐ மட்டும் ஏற்றுக்கொள்பவர்களுக்குக் கிடைப்பது கடினம். ‘‘வேலை முக்கியம். மற்றனவெல்லாம் இரண்டாம்பட்சம்’’ என்ற மனநிலை உள்ளவர்களுக்குத் தான் இது கிடைக்கும். தரிசன நாட்களில் வேலையை விட்டுவிட்டு தியான மையங்களுக்கு வந்து தியானம் செய்ய முடியாத அளவிற்கு வேலையில் பிஸியாகவுள்ள அன்பர்கள் இருக்கின்றார்கள். மற்ற அன்பர்கள் இதையொரு குறைபாடாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அன்னை, ‘‘உழைப்புஎன்பது உடலின் வழிபாடு’’ என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். அதன்படி பார்க்கும்பொழுது தரிசன நாட்களிலும் வேலையை விடாமல் செய்கின்றவர்களும், அந்நாளில் அன்னையை பிரார்த்திக்கின்றார்கள் என்றுதான் ஆகிறது.

***தொடரும்.....***

❀ ❀ ❀




# karmayogi.net

**(A Unit of The Mother's Service Society, Pondicherry)**

If you and your family are interested in a prosperous, problem-free life and want to embrace new technology, you will be interested in reading this message and responding to it now.

karmayogi.net is a website that exists to help you, the devotee, achieve your personal, social, financial and spiritual goals. It helps you and your family members acquire knowledge on how to overcome difficulties, attract opportunities, cure diseases, and create prosperity in your life.

**FEATURES OF THE WEBSITE:**

- The website is bilingual. The content is available in English and Tamil. It has two sections – Content Section and Discussion Forum.
- Content Section gives in webpage format all the books, articles and past issues of the monthly journal published by The Mother's Service Society and dozens of unpublished books and thousands of unpublished articles and messages.
- The Discussion Forum is a place for all devotees to share their thoughts, knowledge, feelings and experiences with others in a serene, calm, harmonious, peaceful atmosphere. You can discuss your problems, seek solutions and help other devotees solve their problems. You can interact on the forum both in English and Tamil.

**DISCUSSION FORUM:**

- karmayogi.net website is available to you 365 days a year, 7 days a week and 24 hours a day. You will never feel alone next time when you need support – if you are a member of the website.
- The Discussion Forum will give you the power of collective knowledge, different views of an issue, and different experiences and approaches to similar problems. This power will help you make swift progress in any walk of life.
- The activities of Meditation centers will be posted here so that you don't miss any event and keep abreast with all developments.
- You can post your views, problems and thoughts freely without revealing personal identity or compromising privacy and at the same time get valuable advice and suggestions from other members and moderators.
- You will be able to discuss your problem or issues on hand in detail without any inhibition anonymously (this feature will be implemented soon) so that you get the right guidance from the forum moderators and members. When you freely and openly discuss your problems without holding back any facts, getting workable solutions becomes easy.

**THE OFFER:**

The Content Section is being built and will be ready for access in the next few weeks. The discussion forum is ready for your use. The access to the website is restricted to subscribers only.

We have just now begun to enroll subscribers to the website. In the first phase we are inviting only a few selected devotees to participate in the venture.

You are one among the selected devotees.

We personally invite you to become a subscriber, actively participate in the forum and work with us to build an online community of sincere devotees.

All these great benefits come to you at an affordable low price of Rs.1,000 per annum. This is a **NO OBLIGATION** invitation. You are free not to accept the offer, if you are not interested in receiving the benefits. The discussion forum will be launched on 27th December 2007. If you accept our offer and invitation, please provide your details and we will activate your account on 27th December 2007.

Please tick one:

☐ Yes, I am accepting the offer and interested in receiving the benefits to me and my family. Please enroll me as an annual subscriber of the website.

☐ No, I am not interested in accepting the offer and receiving the benefits to me and my family. Please don't contact me about this website again.

| | |
|---|---|
| Your Full Name | |
| Your Postal Address | |
| Your Phone Number | |
| Your email address (access details and password will be sent to this address) | |
| Your email address (again) | |
| Desired User Name (minimum 8, maximum 14 English characters) | |
| Amount Paid | Rs.1,000/- |
| Date | |
| Your Signature | |
| Approved by (for office use) | |

Payments can be made at the Mother's Center or sent by post to The Mother's Service Society, Pondicherry - 11.



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**912) ஆழ்ந்த உணர்வையும், எண்ணங்களையும், அன்னைக்கு நன்றி சொல்லும்முன் கருத வேண்டும். இல்லாவிட்டால், நன்றி மேல் மட்டத்திலிருந்து எழும். ஆழ்ந்த நன்றி எழ, ஆழ்ந்த உணர்வும், நன்றியும் உதவும்.**

*எண்ணமும், உணர்வும் விலகி நன்றி எழும்.*

நாம் நம் மனத்தையறியோம். கண்ணில் படுவது, காதில் விழுவது மனத்தில் நடமாடும். அவை நமக்குச் சம்பந்தமானவையல்ல; நம்மைச் சுற்றி நடப்பவை. அவை மனத்தை ஆக்ரமித்துக்கொண்டிருப்பதால் அவை நம் எண்ணம், நம் உணர்வுஎனக் கொள்கிறோம்.

- தினமும் தான் விரும்பும் பெண்ணுக்கு கடிதம் எழுதியவன், அவள் தபால்காரனை மணந்ததை அறிந்து ஏமாந்துபோனான். பார்த்தது தபால்காரனை; அவனே முடிவில் கணவனானான்.
- பெரிய சொத்தை இடையே புரோக்கராக இருந்து விலை பேசியவர், அவரே வாங்குவதுண்டு.
- அரசியல் தலைவரிடம் தொழிலதிபருக்கு ஆளாகப் போனவர், அவரே நண்பராகி, தொழிலதிபரை விலக்கிவிட்டார்.

மனத்திற்கு இந்தக் குணம் உண்டு. தான் எதை நினைக்கிறது என அறிய முடியாதது மனம். அந்த நேரம் மனத்தை நிரப்பிக் கொண்டுள்ளதே தன் நினைவுஎனக் கருதும் பான்மையுடையது மனம்.

நாம் அன்னைக்கு நன்றி சொல்லும்பொழுது அது ஜீவனின் ஆழத்திலிருந்து வர வேண்டும். அப்பொழுது உடல் புல்லரிக்கும். உடல் புல்லரிப்பது நன்றிக்குரிய அடையாளம்.

எலிசபெத் உயர்ந்த கதாநாயகி. Pound 50 வருமானம் உள்ளவள். Pound 100 அல்லது Pound 200 வருமானமுள்ள ஆபீசரை வரனாகத் தேடுகிறாள். அப்படிப்பட்டவர் பலர் அவள் ஊருக்கு வருகின்றனர். அவர்களில் அழகான ஆபீசர் ஒருவரைக் காதலித்தாள். அவன் அவளைவிட்டு சமீபத்தில் Pound 10,000 சொத்து பெற்ற பெண்ணிடம் போய்விட்டான். அவள் மனமும், ஆத்மாவும், சுபாவமும், பர்சனாலிட்டியும் உயர்ந்தவை. நாட்டில் பெரிய பிரபுவை மணந்து, பெரிய எஸ்டேட்டின் தலைவியாகும் திறமையுள்ளவள். தன் தகுதியை அவள் அறியவில்லை. அதனால் சிறிய ஆபீசரை நாடினாள். அவனும் விலகினான். இவளையறியாமல் Pound 10,000 வருஷ வருமானமுள்ள பெரும்பிரபு, இளைஞனானவன் கொஞ்ச நாளாக அவளை விரும்பி, அவளை மணக்க முடிவு செய்தான். அவனுடைய நிலையிலிருந்து அவள் நிலைக்கு இறங்கி வருவது கேவலம் என்பதால், தன் பிரியம் எவரும் அறியாதவாறு மறைத்துவிட்டான். அவளுக்கே அவன் விருப்பம் தெரியாது. முடிவாக, ஒரு நாள் அவளைச் சந்தித்துத் தன்னை மணக்கும்படிக் கேட்கிறான். அவனைப் பற்றிய புகார்கள் அவளிடம் வந்துள்ளன. அவள் அவற்றை நம்பினாள். தான் விரும்பி, விலகிய அழகனின் உருவம் அவள் மனதை ஆக்ரமித்துக்கொண்டுள்ளது. பிரபு அவளை மணக்கும்படிக் கேட்டபொழுது அவளுக்கு அளவுகடந்த ஆச்சரியமும், நன்றியும் எழ வேண்டும். ஆனால் அவளுக்கு,

- ✡ பிரபுவின் சொற்கள் பண்பற்றவை எனவும்,
- ✡ பிரபு கெட்டவன்என தான் கேட்ட செய்தியும்,
- ✡ பிரபுவைப் பற்றிய தவறுகளும், தனக்கேற்பட்ட மட்டமான பிரியமும் மனத்தை நிரப்பிக்கொண்டிருந்தன. அவனை மறுத்துவிடுகிறாள்.

**ஆழ்ந்த நன்றி எழவேண்டிய நேரம், ஆழ்ந்த வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் அவளுக்கு ஆச்சரியமும் ஏற்பட்டது.**

மேலும் அவனளித்த விவரங்களால் இவளுக்கு ஏற்பட்ட வெறுப்பு கொஞ்சம் கொஞ்சமாக விலகியது. ஆனால், முழுவதும் விலகவில்லை. பிறகு நடந்த சம்பவங்கள் பல. அவற்றால் அவள் அந்த இளம்பிரபுவின் நல்ல குணங்களை அறிகிறாள். அதைக் கேட்டு கெட்ட அபிப்பிராயத்தை நல்ல அபிப்பிராயமாக மாற்ற அவள் மனம் வெறுப்படைகிறது. வெறுப்பைச் சிரமப்பட்டு விலக்குகிறாள். அவள் குடும்பத்தில் ஏற்பட்ட அவமானத்தை பிரபுவே முன்னின்று, பெருஞ்செலவு செய்து விலக்குகிறான். அந்த அவமானத்தை ஏற்படுத்தியது இவள் பிரியப்பட்ட ஆணழகன்.

- ✡ எலிசபெத் தன்னை ஏற்றுக்கொள்வாளா எனப் பிரபு ஏங்குகிறான். அவளை மீண்டும் கேட்க அவனுக்குத் தைரியமில்லை.
- ✡ அவளுக்கு அவன் மீது வெறுப்பு, விளக்கத்தால் விலகியது. அவன் செய்த பேருதவிகள் நன்றியை எழுப்பின. அவனுக்கு நன்றி தெரிவிக்கும் பொழுது பிரபு மீண்டும் அவளிடம் தன்னை மணக்கும்படிக் கேட்கிறான், சம்மதிக்கிறாள்.

நமக்கும், அன்னைக்கும் உள்ள தொடர்பு பெரும்பாலும் இது போன்றதே. நமக்கில்லாத தகுதியை ஏற்று, அன்னை நம்மை நெருங்கி வரும்பொழுது நமக்கு ஏற்படுவது சந்தேகம், வெறுப்பு. அன்னை நமக்குச் செய்யும் சேவையால் வெறுப்பு குறைகிறது. ஆனால், முழுவதும் விலகுவதில்லை.

**நன்றி கூற முயன்றால் மேல்மனத்தின் கசடுகள் எழுந்து நன்றியைக் கறைப்படுத்துகின்றன.**

**கசடான கறையை விலக்கி, வெறுப்பைத் துடைத்தபின் நன்றி நல்லுணர்வாக எழும்.**

❀ ❀ ❀

## 913) இனி அருளை ஏற்க முடியாதுஎன்ற நிலை வந்தவுடன் வலக்கையில் வலி எழும். எழுதுவதே தொழிலானால், அவ்வலி உள்ளங்கையிலும், விரல்களிலும் தெரியும்.

*அருளை ஏற்க முடியவில்லையெனில் வலக்கை வலிக்கும்.*

- ✡ வெகுதூரம் நடந்தால் கால் வலிக்கிறது.
- ✡ படிப்பது புரியவில்லையெனில் கொட்டாவி வரும். தொடர்ந்து படித்தால் தூக்கம் வரும்.
- ✡ படிப்பு வாராத குழந்தையைப் பள்ளிக்குப் போகச் சொன்னால், தலை வலிக்கும்; வற்புறுத்தினால் ஜுரம் வரும். ஜுரம் வருவது படிப்பை மூளை ஏற்கவில்லை எனக் காட்டுகிறது.
- ✡ விருந்தாளி போகும்பொழுது ஏதாவது ஒரு பொருளை நம் வீட்டிலேயே மறந்து விட்டுவிட்டுப் போனால், அவருக்கு மீண்டும் நம் வீட்டிற்கு வரப் பிரியம்என்பது வழக்கு.
- ✡ ஹாஸ்டலில் தங்க விருப்பமில்லாத மாணவன் ஹாஸ்டலுக்குப் போனவுடன் ரூம் சாவியை வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்பான். ஹாஸ்டலிலேயே தொடர்ந்து இருக்கச் சொன்னால், பல நாள் படுக்கையாக இருக்கும் வியாதி வரும்.
- ✡ வேலைக்குத் தகுதியில்லாதவனுக்கு செல்வாக்கால் வேலை வாங்கிக் கொடுத்தால், அவனுக்கு வேலைசெய்ய முடியாத சந்தர்ப்பம் வரும். மேலும் அப்படிப்பட்டவரை வற்புறுத்தியபொழுது அவர் டிபார்ட்மென்டையே சர்க்காரில் எடுத்துவிட்டார்கள்.
- ✡ பொட்டை மண் பயிராகாது. பயிர்செய்ய, பண்படுத்த 10 அல்லது 20 வருஷ காலமாகும். வேறு வசதியிருப்பதால் செலவு செய்து போர்க்கிணறு போட்டுப் பயிரிட்டால் போர் கெட்டுவிடும். அதிகச் செலவு செய்து பெரிய போர் போட்டால், வேலை செய்யப் பிடிக்காத மானேஜர் வருவார்.

**எதற்கும் அளவுண்டு. அளவை மீறிப் போக வேண்டுமானால்,<br>அடிப்படைக் கோளாறு எழும்.**

அன்னை பக்தர்கட்கு அந்த அளவுமில்லை; எந்த அளவுமில்லை. ஆனால், அதற்குரிய முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

- ➛ **வலக்கை வலிப்பவர் அன்னை பக்தரானால், வலி மறந்துவிடும். அன்னை பக்தருக்கு அவ்வலி வந்தால், அவர் அன்னையை மேலும் சற்றுத் தீவிரமாக ஏற்றால் வலி மறையும்.**
- ➛ **படிக்கும்பொழுது கொட்டாவி வந்தால், படிப்பதை நிறுத்திவிட்டு முன் பாடம் புரியும்படி படித்தால் கொட்டாவி வாராது. 5 நிமிடம் தியானம் செய்தாலும் கொட்டாவி மறைந்துவிடும்.**



- ➛ **ஹாஸ்டலுக்குப் போனால், ஜுரம் வருகிறது எனில், அந்த விபரத்தைப் பையனிடம் கூறி, அவன் காரணத்தை ஏற்றுக்கொண்டால் ஜுரம் நிற்கும். அன்னை படத்தை ஹாஸ்டலில் அவன் மேஜை மேல் வைத்தால் இனி பிரச்சினையிருக்காது.**
- ➛ **வேலை செய்யப் பிரியப்படாதவர் மனம்மாறி வேலை செய்யப் பிரியப்பட்டால், எதிரான சந்தர்ப்பம்மாறி விலகும். அன்னையை ஏற்றாலும் நிலைமை மாறும்.**
- ➛ **பயிராகாத பொட்டை மண் நிலத்திற்குச் சொந்தக்காரர் அன்னையை ஏற்றுக்கொண்டால், எல்லாத் தொந்தரவுகளும் விலகும். நிலைமை எதிராக மாறி, ஏராளமாக விளையும்.**
- ➛ **அன்னை பக்தர்கட்கு அடுத்த கட்டத்தில் லிமிட் எழுந்தால், அன்னையை அளவுக்கு மேல் ஏற்றுக்கொள்வது தடையை விலக்கும்.**

ஒரு ஸ்தாபனத்திற்கு அதற்குத் தகுதியற்ற அளவுக்கு ஒருவர் சேவை செய்தார். ஸ்தாபனத்திற்கோ, உடன் வேலை செய்பவருக்கோ, தலைவருக்கோ இல்லாத தகுதிக்குரிய பெரிய சேவை செய்தவரை அந்த ஸ்தாபனத்தைவிட்டு விலக்கிவிட்டனர். 5 வகுப்பு படித்தவருக்கு B.A. எழுதும் வாய்ப்பு வந்தது. ஓராண்டு படித்த பின், எல்லாம் மறந்துவிட்டது. மீண்டும் சொல்லிக்கொடுங்கள் என்றார். காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை 21 நாளில் ஓராண்டு பாடத்தை மீண்டும் நடத்தினர். படித்தவருக்கு மஞ்சள் காமாலை வந்து ஒரு மாதம் படுக்கையானார். பாடம் மறந்துவிட்டது. அடுத்த முறை திரும்ப படிக்க நேரிட்டது.

தொடரும்.....

❀ ❀ ❀

## ஜீவிய மணி

**திட்டமில்லாவிட்டால் பெறும்பட்டம் பெரியது.**

# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**75. மன்னிக்க முடியாத குற்றத்தை அளவுகடந்து பாராட்டு.**

பெண்ணுக்குத் திருமணம் செய்தால் அவள் வருமானம் போய்விடும் என்று திருமணம் செய்யாமலிருப்பது; நேருவை இந்த நாட்டில் பேர், ஊர் தெரியாத தலைவர்எனப் பேசுவது; மகாத்மா காந்தியை 1945இல் சிலர் பின்பற்றினர் என்பது; மகன் முதல் மார்க் வாங்கியபொழுது ‘இக்காலத்தில் மார்க்கை அள்ளிப் போடுகிறார்கள்’ என்பது; ரூ.20 சம்பாதிக்கும் தகப்பனாரிடம் 1960இல் தான்பெற்ற 62 ரூபாய் சம்பளத்தில் 1 ரூபாயும் எடுத்துக்கொள்ளாமல் கொண்டுவந்து கொடுத்தால், ‘அப்படி வை’ என்று சொல்லி 5 மணி நேரம் அதைத் தொடாமலிருப்பது; ஊரிலேயே பெரிய சொத்து சம்பாதித்தவரை ‘அவருக்கு வருமானமில்லை, சும்மா உட்கார்ந்திருக்கிறார்’ என்பது அனைவரும் காணமுடியாத அற்புதங்கள். இவை மன்னிக்க முடியாத, பொறுக்க முடியாத குற்றங்கள். வாழ்க்கையில் இதற்குப் பொதுவாகக் கிடைக்கும் பலன், பெண் தானே திருமணம் செய்துகொண்டு வீட்டை விட்டு வெளியேறுவாள்; உள்ள பெரிய பதவி அழிவது (சர்ச்சில் இங்கிலாந்து பிரதமராக இருந்தபொழுது நேருவை அப்படிப் பேசினார். இங்கிலாந்தின் பிரதமர் அன்று உலகப் பிரதமர். அவர் போரில் நாட்டையும், உலகையும் காப்பாற்றினார். போர் முடியும்முன் பதவி போய் விட்டது); காந்திஜீயை அப்படிப் பேசியவர் அல்பாயுசாகப் போனார்; தகப்பனார் அலட்சியம் செய்த சம்பளம் அடுத்த மாதத்திலிருந்து அவருக்கு வாராது; சும்மா உட்கார்ந்திருக்கிறார் எனக் கூறியவருக்கு சாப்பாடில்லாமல் சும்மா உட்காரும்நிலை தண்டனையாக வரும்; மன்னிக்க முடியாதவையென்னும் இவை வாழ்வின் வண்ணங்கள். நாம் செய்யக்கூடியவை அவற்றைவிட்டு விலகலாம்; ஆத்திரமாக எதிர்த்து சண்டையிடலாம்; நிச்சயமாக வெற்றி கிடைக்கும். அவை சரி. ஏற்பதும், பாராட்டுவதும் தேவையில்லை. இவை நமக்கு ஏன் வந்தனஎன அன்னை நோக்கத்தில் கண்டால், இப்படிப்பட்டவருள்ளும் அன்னை



வசிக்கிறார்; அவரைக் கண்டறிவது அன்னையின் அதியுயர்வைக் காண வாய்ப்பு என ஓர் அன்பர் புரிந்துகொண்டால், இது அவருக்குரிய முறை.

- ❀ அப்படிச் செய்த பெண்தான் தன்இஷ்டப்படி திருமணம் செய்து, கடைசி வரைப் பெற்றோரைக் காப்பாற்றினாள்.
- ❀ அலட்சியம் செய்யப்பட்ட மகன் தகப்பனாரைக் கடைசிவரைக் காப்பாற்றியதுடன், அவர் ஆசையை - கற்பனைக்கெட்டாத ஆசையையும் - பூர்த்திசெய்தார்.
- ❀ சும்மா உட்கார்ந்திருக்கிறார் எனப் பேசிய உத்தமருக்கு ஒரு பக்கம் வருமானம் 15 மடங்கு அதிகரித்தது; செல்வாக்கு பெருகியது. உலகில் உள்ள அவ்வளவு வியாதிகளும் ஒன்று தவறாமல் வந்து பெரும்பாலும் ஆஸ்பத்திரி, மருந்து, குறை சொல்வதுடன் வாழ்கிறார்.
- ❀ குணம் வியாதியாகப் பரிமளிக்கும்என இவர் வாழ்வு நிரூபிக்கிறது.
- ❀ அன்னை அவற்றுள்ளும், அவற்றைக் கடந்தும் தெரிவார். அதைக் காண்பது யோக பாக்கியம். இப்படிப்பட்டவரிடம் நல்லபேர்என எவரும் பெற்றிருக்கமாட்டார்கள். அதை ஒரு நண்பர்பெற முனைந்தார், பெற்றார். அவர் வாழ்வு பரிமளித்தது. மன்னிக்க முடியாத குற்றத்தை அளவுகடந்து பாராட்ட பரந்தமனம் தேவை. பரந்தமனம் பல கோணங்களிலும் வரும்.

**76. வெறும் கவர்ச்சி அர்த்தமற்றதுஎன அறிய வேண்டும்.**

கவர்ச்சி தவறாது கவரும்.

Pride & Prejudiceஇல் Wickham கவர்ச்சியாய் அதிக இதமாக அவன் பேசும் மொழி இனிமையாக சுவைக்கும். தானே பேசமாட்டான். கேட்டால் பக்குவமாகப் பதில் கூறுவான். சொல்நயம், பொருள்நயத்துடன் இழைந்து, நாகரீகத்தின் நயத்தைக் காட்டும். அவன் பொய்யானவன். அவனால் தீங்கிழைக்க முடிந்தது. Fitz William வில்லியம் அதே கதையில் அவனைப்போலப் பெரும்பாலும் இனிமையானவன். அவன் gentleman நல்லவன். அவனால் எவருக்கும் தீங்கு வரவில்லை. விக்காம் அழகன். அழகன் கவர்ச்சிக்கு அடிபணியாதவரில்லை. கவர்ச்சி பெரியதானாலும்,

இளைஞர்கள் கண்ணில் படாதவை பெரியவர் கண்ணில் படும். பெரியவர்கள், அதுவும் முக்கிய நேரங்களில் முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் சுபாவத்தைக் காட்டும் செயல்களைக் காணமறுப்பது மன்னிக்க முடியாத காரியம்.

அன்பர்கட்கு, பெரியவருக்கும் இல்லாத அறிவு, சூட்சுமம், ஞானம், பாதுகாப்புண்டு.

அத்தனையையும் புறக்கணித்து கவர்ச்சியை மட்டும் அன்பர் கருதுவாரா-னால் அது நாம் ஏற்கக்கூடாதது.

முகம், நடை, உடை, பாவனை, சொல், எப்படியிருந்தாலும், செயல் மனிதனைக் காண்பிக்கும்.

செயலில் திறமையை குணத்திலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டும்.

திறமையுடன் நடத்தை தவறாக அமையலாம்.

நல்ல குணத்துடன் கெட்ட நடத்தை இணைந்து வாராது.

சொல் கடுமையானால், அவன் நல்லவனாக இருக்கலாம். ஆனால் கடுமையான சொல்லும் இதமான செயலும் சேரா.

திருமணம், பார்ட்னர் விஷயங்களில் இது மிகவும் முக்கியம்.

அன்பருடைய அன்றாடச் செயல்கள் திருமணத்திற்குச் சமமானவை.

அன்னையின் அன்பர் என்றால், அவர் சொர்க்கலோகவாசி, உலகில் நடமாட வந்திருக்கிறார்என்று பெயர் (citizens of heaven domiciled on earth).

வெறும் கவர்ச்சி தீயசக்திகள் நுழையும் வாயில்.

கவர்ச்சி கண்ணை மறைக்கும்.

கண் போதாது, திருஷ்டி வேண்டும் என்பவர் கண்ணையும் மறைத்துக் கொண்டால் என்ன செய்வது?

நாம் சொல்லும் ஞானதிருஷ்டி நெற்றிக்கண்ணைவிட உயர்ந்தது.

அந்நிலையில் அன்பர் கண்ணைக் குருடாக்கிக்கொள்வது சரியா?

கவர்ச்சி அறிவை மறைக்கும் அஞ்ஞானத்திரை.

*தொடரும்....*

❀ ❀ ❀





## அற்புத குழந்தை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

அவளும் நல்ல குடும்பத்தில் பிறந்த பெண். தானும் அப்படியே. தனக்குத் திறமை, பொறுப்புணர்வு, உழைப்பு யாவுமிருந்ததுபோல் அவளுக்குமிருந்தது. தான் எது பற்றியும் கவலைப்படாமல், நம் கடமைகளை ஒழுங்காகச் செய்கிறோம், யாவும் நன்றாயிருக்கிறது என்ற மனநிறைவோடு வாழ்ந்தபோது, அதே நிறைவுகள் பெற்றிருந்த வசந்தி அவற்றையெல்லாம் நம்பாமல் கடவுளை நம்பியது நினைக்கத் தோன்றியது. எதற்கெடுத்தாலும் அன்னையிடம் சொல்ல வேண்டும் என்றது, அன்னைக்கே முதலிடம்என்றது, தான் எத்தனை கேலி செய்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாது தன் பக்தியை அவள் தொடர்ந்தது, அக்குணம் பற்றியே பிரபு அவளை விரும்பி மணந்தது, யாவும் நினைவில் எழுந்தது. கோவிலுக்குப் போவதை ஒரு பழக்கமாய்க் கொண்டு, தன்னை அலங்கரித்துக்கொண்டும், அழகுபடுத்திக்கொண்டும் செல்பவர்களைப் பார்த்து, 'இவர்கள் ஏனிப்படி இருக்கிறார்கள்' என்று நினைத்ததுண்டு. அதே நேரம், எந்த நேரமும் கடவுள் நினைவால் சந்தோஷப்படும் சிலரைப் பார்த்து மனதில் மகிழ்ந்திருக்கிறாள். ஆடம்பரமான புறநிலை பக்தி அவளை வெறுப்புக்கொள்ளச் செய்ததுபோல் ஆழமான பக்தி அவளைத் தாக்கியதில்லை. அதை உயர்வாக எண்ணுவதோடு சரி. அதில் அவளுக்கு ஈடுபாடு வந்ததில்லை. ஆனால், இப்போதெல்லாம் வசந்தி நினைவு ஏனோ அதிகம் வருகிறது. கடந்த காலங்களில் வேலை, வேலைஎன்று எந்த நினைவும் அதிகம் இடம் பெறவில்லை. கிடைக்கும் நேரத்தில் வசந்தியுடன் பேசுவதுண்டு. இருவரும் பிறந்த வீட்டிற்கு

ஒரே நேரத்தில் போக முடியாததால் திருமணத்திற்குப் பிறகு சந்திப்பும் இல்லை. அவள் இரண்டு குழந்தைகளையும் இன்னும் நேரில் பார்க்க வாய்ப்பில்லை.

அன்று மதியவுணவு இடைவேளையில் போனில் வசந்தியுடன் பேசினாள். ''வசந்தீ, நீ எப்படியிருக்கிறாய்? உன்னுடன் பேசவேண்டும் போலிருக்கிறது''. அவள் குரலில் என்றுமே கேளாத சோகவுணர்வு மிக மெலிதானாலும், வசந்திக்குப் புரிந்தது.

''எனக்கும் உன்னை நேரில் பார்க்க ஆவல்தான். நாம் சந்தித்து நீண்ட காலமாயிற்று. வரும் பொங்கல்சமயம் சேர்ந்தாற்போல் 5 நாட்கள் லீவு வருகிறது. அப்போது நீ கோவை வந்தால் சில தினங்களாவது சேர்ந்திருக்கலாம். உங்கள் வீட்டில் அனுப்புவார்களா?'' என்றாள் வசந்தி.

''சாதாரணமாகவே அனுப்புவார்கள். இப்போதுள்ள நிலையில் நிச்சயம் அனுப்புவார்கள்''.

''இப்போதுள்ள நிலைஎன்று எதைச் சொல்கிறாய்?''

''அதை நேரில் சொல்கிறேன்'' என்ற சாந்தியின் குரலில் உற்சாகம் இல்லை.

''சாந்தி, ஏன் என்னவோபோல் பேசுகிறாய்? என்ன சோகம் உனக்கு? உனக்குச் சோகப்படத் தெரியாதுஎன்று எவ்வளவு பெருமைப்படுவேன்'' என்று பரிவாய்க் கேட்டாள் வசந்தி.

''ஒ! அதுவா. உன் கண்பட்டுவிட்டது. அதனால்தான்'' என்று பழைய குறும்பிற்கு மாறினாள் சாந்தினி.

''கண் படுவதையெல்லாம் நீ நம்பமாட்டாய்என்று எனக்குத் தெரியும்'' என்றாள் வசந்தி.

''சரி, நீ கட்டாயம் கோவைக்கு வந்துவிடு. நேரில் பேசுவோம்'' என்றாள் சாந்தினி.

தன்னைப் புரிந்துகொண்டு, பரிவுகொண்ட அன்புத்தோழி வசந்தி. அது மட்டுமன்று, பொறாமைப்படத் தெரியாது. பேராசை இல்லாத,



குற்றம் பாராட்டாத பெரிய மனுஷி அவள். அவள் நட்பால் எத்தனை இதமான நாட்கள். தன் கிண்டல், கேலி, விளையாட்டு, இதனால் எல்லாம் பாதிக்கப்படாத அன்புச்செல்வியவள். இத்தனை பண்புகளுடன் தலைசிறந்த கடவுள் பக்தி வேறு.

இப்போதெல்லாம் யாரேனும் அபாரசக்தி வாய்ந்த ஒருவர் (மானுடர்களைவிட உயர்ந்த ஒருவர்) நட்பு, ஆதரவு தனக்கு வேண்டும் என சாந்தினி நினைக்கத் தொடங்கிவிட்டாள். அதுதான் கடவுள் பக்தியோ? அதுதான் மானுடர் இயல்போ?

வீட்டில் தன் கணவரிடமும், மாமன், மாமியாரிடமும், இம்முறை பொங்கல் விடுமுறையில் தன் பெற்றோருடன் இருந்துவரப் பிரியப்-படுவதாய் கூறினாள்.

பிள்ளைப்பேற்றுக்கு வாய்ப்பில்லைஎன்ற நிலையில் அவள் சற்று மனத்தளர்ச்சி அடைந்திருப்பதை உணர்ந்த மாமியார் வீட்டினர் அவள் ஆறுதல் கருதி, அவள் சென்றுவருவதைப் பிரியமாய் ஒப்புக் கொண்டனர்.

இப்படி வாழ்வு முழுவதும் நல்ல சூழலே அமைந்துவிட்டதால், போராடும் நிலையே வாராததால், தன்னைவிடப் பெரிய சக்தியை நோக்கித் தான் பிரார்த்திக்கவில்லையோ? அப்படியும் சொல்வதற்கு இல்லை. வசந்திக்கும் இதே நல்ல சூழ்நிலைதான். ஆனாலும் அவள், இயல்பாக நடக்கக்கூடியதற்கெல்லாமும் இறைவனிடம் கேட்பாளே, இது எப்படி? இப்பொழுது தனக்கொரு தேவை எழுந்துள்ளது. அது பிள்ளைச்செல்வம். அதைத் தன் கடமையாலோ, நேர்மையாலோ, திறமையாலோ பெறமுடியாதுஎன்னும்போது கடவுள்சக்தியைச் சார்வது சரியோ என்றெண்ணினாள். கிடைத்தாலும், கிடைக்கவில்லை என்றாலும், அது இறைவன் செயல்என்றும், அதைப் பணிந்து ஏற்க வேண்டும்என்றும், அந்த இளம் வயதிலேயே கூறும் பக்குவம் பெற்ற வசந்தியின் குணம் நினைவுக்கு வந்தது. தனக்குத் தெரிந்த ஒரே நல்லது வசந்திதான்.

பொங்கல் விடுமுறையும் வந்தது. கூறியபடியே சாந்தினி தன்

பெற்றோர் இருப்பிடம் நோக்கி கோவை வந்தாள். வசந்தி முன்னதாகவே வந்திருந்தாள்.

திருமணம்ஆன இத்தனையாண்டுகளில் இருவரும் போனில் பேசிக்கொள்வதுண்டு. குடும்பப் பொறுப்பு, அலுவலகப் பொறுப்பு, பிரமோஷனுக்கான தேர்வுகளுக்குப் படிப்பது என்று ஓயாத வேலைகளுக்கிடையில் அவள் தன்னையே மறந்திருந்தாள். எப்போதேனும் பெற்றோரைக் காண தன் கணவருடன் வந்து, உடனே திரும்பிவிடுவாள். இவள் வரும்போது வசந்தி வர முடியாததால் இருவரும் நேரில் சந்திக்க வாய்ப்பே இல்லாதிருந்தது. இப்போது எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, விடுதலை உணர்வுடன் வந்திருந்தாள். தோழியைப் பார்க்கப்போகிறோம்என்ற மகிழ்ச்சி வேறு பெற்றிருந்தாள்.

இவள் ஆட்டோவிலிருந்து இறங்கி டிரைவருக்குப் பணம் கொடுத்தாள். டிரைவர் இவள் கொண்டுவந்த சூட்கேஸ் மற்றும் டிராவலிங் பேக்குகளை முன்புறத்தில் கொண்டு வைத்துவிட்டுப் போனார். சாந்தி மெல்ல பழைய நினைவுகளுடன் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள். முன்னறையில் ஒளிந்துகொண்டு, இவளைக் கண்டதும் ஓடி வந்து அவளைக் கட்டிக்கொண்டு, ''ஆன்ட்டி, நாங்கள் யாரென்று சொல்லுங்கள் பார்ப்போம்?'' என்று கூறிய இரண்டு தங்க விக்ரகங்களைக் கண்டு மெய்மறந்துபோனாள்.

வசந்தியின் இறையுணர்வில் தோய்த்தெடுக்கப்பட்ட தெய்வீகக் குழந்தைகளல்லரோ இவர்கள்? 4 வயதும், 3 வயதும் கொண்ட ஆணும், பெண்ணும்.

அவர்கள் மழலை, சின்னக் கைகளின் மெத்தென்ற ஸ்பர்ஸம், கள்ளமற்ற பார்வை, முன்பின் பார்த்தறியாத தன்னைக் கட்டிக் கொண்ட அன்பு, யாவும் அவளைப் பரவசப்படுத்தியது. சில நாட்களாகக் கூண்டில் அடைபட்டதுபோன்ற கடும் உணர்விலிருந்து விடுபட்ட சந்தோஷம்.

''நீங்கள் யாரென்று சொல்லிவிட்டால் ஆன்ட்டிக்கு என்ன தருவீர்கள்?''



''சாக்லேட் தருவோம்''.

''பிரபுக்குட்டி, ப்ரீத்திக்குட்டி, சரியா?''

''சரியாய்ச் சொன்னீர்கள் ஆன்ட்டி. அம்மாவிடம் சொல்லி சாக்லேட் வாங்கித் தருகிறோம். வாங்க'' என்று அவள் இரண்டு கைகளையும் ஆளுக்கொன்றாய்ப் பற்றி உள்ளே இழுத்தார்கள்.

அவள் கண்களில் கண்ணீர்த்துளிகள் உருண்டன. ''ஆன்ட்டி, அழறீங்களா? என்று ஆறுதலாக இருவரும் ஒரே குரலில் கேட்டனர்.

''சந்தோஷப்படுகிறேன்'' என்று கூறியவண்ணம் அவர்களுக்கு என்று வாங்கிவந்த பிஸ்கட் பாக்கெட்களை அவர்களிடம் கொடுத்து, ''அம்மா எங்கே?'' என்று விசாரித்தாள்.

உள்ளே இவள் அம்மாவுடன் சமையலில் உதவிக்கொண்டிருந்த வசந்தியும், இவள் அம்மாவும் ஆட்டோ சத்தம் கேட்டு வெளியே வந்தனர்.

''வா சாந்தி, எப்படியிருக்கிறாய்? வந்தவுடன் உன்னைப் பிடித்துக் கொண்டார்களா?'' என்றாள் வசந்தி.

''நான்தான் இவர்களைப் பிடித்துக்கொண்டேன்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள்.

''நீ எப்போது ஊரிலிருந்து வந்தாய்?''

''நான்கு நாட்கள் முன்னதாகவே வந்துவிட்டேன். அம்மாவுக்கு உடம்பு சரியில்லைஎன போன் வந்ததால், திடீரென வர நேர்ந்தது. நீ வருவாய்என்று இவர்களிடம் சொல்லிவைத்திருந்தேன். 'ஏன் இன்னும் வரவில்லை?' என்று ஒரே ரகளை''.

''அம்மா இப்போது எப்படியிருக்கிறார்கள்?''

''நன்றாக ஆகிவிட்டார்கள். நீ நீண்ட நேரம் பயணம் செய்து வந்திருக்கிறாய். சாப்பிட்டு, ஓய்வெடு. இவர்களைத் தூங்கவைத்து விட்டு வருகிறேன்'' என்று புறப்படத் தயாரானாள் வசந்தி.

''நாங்கள் ஆன்ட்டியுடன்தானிருப்போம்'' என்று இருபுறமும் வந்து கட்டிக்கொண்டனர்.

''கவலைப்படாதே வசந்தி. எனக்கொன்றும் பிரச்சினையில்லை. அவர்கள் என்னுடன் இருக்கட்டும்''.

''அவர்கள் செய்யும் கலாட்டாவில் போதும், போதுமென்று ஆகிவிடும்''.

''பரவாயில்லை வசந்தி. நானும் கொஞ்சம் கலாட்டா செய்வேன். உனக்குத்தான் அதெல்லாம் தெரியாது''.

''உன் விருப்பம். நான் போய் அம்மாவைக் கவனித்துவிட்டு வருகிறேன்''. வசந்தி சென்றுவிட்டாள்.

நீண்ட நாட்கள் கழித்து வந்த மகளை அன்புடன் கையைப் பற்றி, ''வா சாந்தி, ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு பேசலாம்'' என்றழைத்தாள் அம்மா.

''பசங்களா, உங்கள் தட்டுகளை எடுத்து வாருங்கள். ஆன்ட்டிக்கு ஒரு தட்டு வையுங்கள்'' என்றாளம்மா.

அவர்கள் இந்த வீட்டினர்போலவும், இவள்தான் விருந்தாளி போலவுமிருந்தது.

''இதுதான் என் தட்டு'', ''இதுதான் என்னோடது'' என்று ஆளுக்கு ஒரு தட்டினை எடுத்துவந்தார்கள்.

''உங்கள் பெயர் எழுதியிருக்கிறதா அதில்?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''பெயர் இல்லை ஆன்ட்டி; அடையாளம். என் தட்டு ரோஸ் தட்டு. அவள் தட்டு லோட்டஸ்'' என்றான் பிரபு.

கம்பெனி அடையாளம் சிறுவடிவில் பொறிக்கப்பட்டிருப்பதைத்தான் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று புரிந்துகொண்டு சிரித்தாள்.

''சரி, ஆன்ட்டிக்கு ஒரு தட்டு இல்லையா?'' என்று கெஞ்சுவது போல் கேட்டாள்.

''என் தட்டில்தான் ஆன்ட்டி நீ சாப்பிடணும்'' என்றான் பிரபு.



''இல்லையில்லை, என் தட்டுலதான் ஆன்ட்டி சாப்பிடுவாங்க'' என்று ப்ரீத்தி சிணுங்கினாள்.

''சரி சரி. நான் இரண்டு பேர் தட்டிலும் சாப்பிடப்போகிறேன், சரியா'' என்றாள்.

''சரிதான், சரிதான்'' என்று மகிழ்ந்தனர்.

''நீயும் அவர்களுக்குச் சரியா பேசுகிறாயா? இந்தா உன் தட்டு'' என்று அம்மா ஒரு தட்டைக் கொண்டுவந்தாள்.

''தனியா ஒரு தட்டு வேண்டாம்மா'' என்ற அவளைப் பின்பற்றி குழந்தைகளும், ''ஆமாம் அம்மம்மா. நாங்க ஒண்ணா சாப்பிடப் போறோம்'' என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அந்தக் குழந்தைகளின் கள்ளமில்லாச் செயலாலும், மழலையாலும் சாந்தியின் தாய் மனம் நிறைந்தாள்.

அவள், தட்டில் சோறிட்டு, பருப்பிட்டு, நெய்யூற்றி மணக்க, மணக்க உணவூட்டினாள். குழந்தைகள் ஆர்வமாகச் சோறுண்ண, 'அவள்தான் பெற்ற தாயோ' என்னும்படியிருந்தது.

அம்மாவுக்கு ஒரே வியப்பு. கடமை, உழைப்பு, திறமை என்று ஒரே கட்டுப்பாடுமயமான மகள் இப்படி விளையாட்டுத்தனமெல்லாம் செய்வாளாஎன்று ஆச்சர்யம் ஒருபுறம். தனக்குப் பிள்ளைப்பேறில்லை என்றதும் தன்னம்பிக்கை, திறமை எல்லாம் இழந்து, எதற்கோ ஏங்குகிறாளோஎன்று பரிதாபமாயிருந்தது.

''இவர்கள் எப்படியம்மா இங்கு ஒட்டுதலாயிருக்கிறார்கள்?''

''பிறந்ததிலிருந்து, வசந்தி இவர்களை என்னிடம்தான் அழைத்து வருவாள். அவள் கோவை வரும்போதெல்லாம் நீ வராததால் உனக்குத் தெரியவில்லை'' என்றாள் அம்மா.

'உன்மூலம்தான் எங்களுக்குப் பேரன், பேத்தியரே இல்லையே. இவர்கள்தாம் எங்களுக்கு ஆறுதல்' என்று அம்மா சொல்லாமல் சொல்கிறாளோ? சற்று மனம் கசங்கியது. உடனே சரி செய்து கொண்டாள்.

''அதுவும் சரிதான். வேலை வேலையென்று எனக்கு வாழ்வே மறந்துபோனது'' என்றாள் சாந்தினி.

சாந்தினியின் மகப்பேறு பற்றி அவளிடம் பேச வேண்டும்என்று அம்மா நினைத்தாலும், அவளிடம் அதுபற்றி எதுவும் பேச வேண்டாம் என மாப்பிள்ளை ரகசியமாய் போனில் கூறியதை மனதில்கொண்டு, எதுவும் பேச முடியாமல் போனது.

ஒருவாறு சாப்பாட்டுக்கடை முடிந்தது. அம்மாவிடம் போக வேண்டும்என்று குழந்தைகள் கேட்கவேயில்லை. ஏதோ பேச்சு, விளையாட்டுஎன்று நேரம் போனதே தெரியவில்லை.

மாலையானதும், ''பார்க்கிற்குப் போகலாம், வாங்க ஆன்ட்டி'' என்று அவள் கையைப் பற்றிக்கொண்டு புறப்படத் தயாராயினர்.

அவளும் உற்சாகமாய் குழந்தைகளுக்கு முகம் துடைத்து, பவுடர் போட்டு, தலை வாரி, பொட்டு வைத்து, தானும் தயாரானாள்.

வசந்தியும் வந்துவிட்டாள். ''வாம்மா, ஆன்ட்டியுடன் நாங்கள் பார்க்கிற்குப் போகப் போகிறோம். நீயும் வருகிறாயா?'' என்றனர் குழந்தைகள்.

''சரிதான், இன்று நான்-ஸ்டாப் கொண்டாட்டமா? அவளை ஓய்வெடுக்கவே விடவில்லையா நீங்கள்?''

''அதெல்லாமில்லை வசந்தி. நான் அவர்களுடன் மகிழ்ச்சியாய் தானிருக்கிறேன். வெளியே போகலாமா? உன்னுடன் பேச வேண்டும்''.

''ஓ, போகலாம். நான் தயாராகத்தான் வந்திருக்கிறேன்'' என்று கையில் சிறு பாஸ்கெட் ஒன்றில் குழந்தைகளுக்குப் பிஸ்கட், தண்ணீர், டவல் எல்லாம் வைத்திருந்தாள் வசந்தி.

குழந்தைகள் இருவரும், ''ஆன்ட்டி கையைத்தான் பிடித்துக் கொள்வேன்'' என்று அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, ஏதேதோ ரைம்ஸ் எல்லாம் கோரஸாகப் பாடிக்கொண்டு, ஒரே மகிழ்ச்சியாய் வர, அவர்கள் மகிழ்ச்சி சாந்தினியையும், வசந்தியையும் பற்றிக் கொள்ள, மலர்ச்சியாய், பெஸ்ட் பார்க்கிற்குச் சென்றனர்.



படிக்கும் காலங்களில் இங்கெல்லாம் வந்தால் படிப்புக் கெட்டுவிடும் என்று இருவரும் வரமாட்டார்கள். இப்போது எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. குழந்தைகளை விளையாட விட்டுவிட்டு அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்தனர்.

''சாந்தி! நான் கேட்கிறேனே என்று நீ நினைத்தாலும் சரி, இந்தக் குழந்தைகளிடம் இவ்வளவு பரிவுகாட்டும் நீ, ஏன் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்ளக்கூடாது?''

என்றுமே கலங்காது, சிரித்துத் திரியும் சாந்தி மனமுடைந்து அழுவதை அன்றுதான் முதன்முதலாகப் பார்த்தாள். ''சாந்தி என்ன இது? இது பொதுவிடம். உனக்குள் உள்ள சோகம் இன்னதென்று தெரியாமல் கேள்வி கேட்டிருக்கிறேன்போலும். அழாது, மனம் திறந்து பேசு. உனக்காக நான் அன்னையைப் பிரார்த்திப்பேன்'' என்றாள் வசந்தி.

கணப்போதில் சாந்தி தன்னை அடக்கிக்கொண்டாள். தனக்குள் இப்படி ஓர் அழுமூஞ்சித்தனம் இருப்பதே தனக்குத் தெரியவில்லையே என்று வெட்கப்பட்டாள்.

''வசந்தி, உண்மையில் நீ, என் அம்மா எல்லோரும் நினைப்பது போல், குழந்தையே வேண்டாமென்று பிடிவாதம் ஏதுமில்லை. சமீபத்தில் தான் மருத்துவப் பரிசோதனை செய்துகொண்டோம். எனக்கு 90 சதவீதம் மகப்பேற்றிற்கு வாய்ப்பில்லை எனவும், அப்படியே கருத் தரித்தாலும் நான் பிழைப்பது உறுதியில்லைஎன்றும் சொல்லிவைத்தாற் போல் 11 டாக்டர்கள் கூறிவிட்டார்கள். என் கணவர் என்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். என்னை இழக்கக்கூடாதுஎன்று நினைக்கி-றார். இதுதான் உண்மை. குழந்தை இல்லைஎன்ற ஏக்கம் எனக்கு இருக்கிறது. ஆனால், அதைப் பெரிதுபடுத்தி வாழ்வை சோகமாக்க நான் விரும்பவில்லை''.

''சாந்தி, உன் திறமை, உழைப்பு, நேர்மை இவற்றிற்கு என் அன்னையிடம் பரிசு உண்டு. மேலும், உண்மையில் அன்னை உன்னிடம் வெளிப்பட ஒரு வாய்ப்புதான் இந்தப் பிரச்சினை. 11 டாக்டர்கள்

கூறியதையும் பொய்யாக்கிவிட்டு, அன்னை உன்னிடம் குழந்தையாய்த் தவழ்வார். ஒரே ஒரு கணம் எல்லாவற்றையும் மறந்து, அன்னையை நினை. நீ பிரார்த்திக்கவே வேண்டாம். அன்னை உனக்குப் பரிசு (குழந்தை) தருவார். ஆனால், பரிசைப் பெற்றதும், அது கடவுளின் கடமைஎன்று சொல்லாமல், அன்னையின் அருள்என்று புரிந்து, ஏற்று, நன்றியுடன் இருந்தால் போதும்''.

''நீ அப்போதெல்லாம் சொல்வாயே, 'இறைவன் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், அது அவன் செயலே. நமக்குத் நன்மையை எப்படி வேண்டுமானாலும் செய்வான்' என்று, அதை இப்போதெல்லாம் நினைக்கிறேன். கடமையைச் சரிவரச் செய்துவிட்டால் கடவுளை நினைப்பதும் மிகையேஎன்பதும் ஒருவகை அகங்காரமே என்பதை உணரமுடிகிறது. இப்போதுள்ள நிலைமையில் இறைவன், அதாவது உன் அன்னை இரங்கினால் தவிர, வேறு வழியில்லை என்று உணர்கிறேன்'' என்றாள் சாந்தினி.

அவள் இப்படிப் பேசியதே வசந்திக்கு மகிழ்ச்சி.

''நாமிருவரும் இன்று எங்கள் குடும்ப டாக்டரிடம் போவோம், வா'' என்றழைத்துப் போனாள். அந்த டாக்டர் சாந்தினியைப் பரி-சோதித்தப்பின், மருத்துவரீதியாய் உங்களுக்கு மகப்பேற்றுக்கு வாய்ப்பேயில்லை. ஆனால், முடிவு மனித முடிவில்லை. இறைவன் முடிவே உண்மை. கடவுள் விரும்பினால் யாரும் தடுக்க முடியாது'' என்று வித்யாசமான முறையில் வைத்தியம் சொன்னார்.

வெளியே வந்த பிறகு, சாந்தினி வசந்தியைப் பார்த்து, ''வசந்தி, டாக்டர் உன் இனம் போலிருக்கிறது. அதுதான் வித்யாசமான வைத்தியம் சொல்கிறார்'' என்றாள். அவர் கடவுள் நம்பிக்கை பற்றிக் கூறியதைச் சுட்டிக்காட்டினாள் சாந்தி. ''அவர் மட்டுமில்லை, எல்லோருமே என்னினம்தான் சாந்தி. அதை உணரத்தான் நேரமாகிறது'' என்று சிரித்துக்கொண்டே வசந்தி கூறினாள்.

''அது சரி வசந்தி, அன்னையை ஆழமாக நம்பும் நீ, என்னை ஏன் மருத்துவரிடம் அழைத்துப்போனாய்?''



''நீ கடவுளைவிட கடமையை, திறமையை, அறிவியலை நம்புகிறவள். அறிவியல்ரீதியான மருத்துவப் பரிசோதனையின் ரிசல்ட்டும் அன்னைக்குக் கட்டுப்படும்என்பதை நீ உணர இதுவொரு வாய்ப்பு அல்லவா?'' என்று மென்மையாக அவள் தோளில் கை வைத்து இதமாகக் கூறினாள் வசந்தி.

''உண்மைதான் வசந்தி. என்னைப் பொருத்தவரை இந்த மகப்பேற்றை பலனாகக் கருதமாட்டேன். தெய்வத்தின் வெளிப்பாடா-கவே ஏற்றுக்கொள்வேன்'' என்றாள் சாந்தினி.

வசந்தியின் தாயை நலம் விசாரிக்க அவர்கள் வீட்டிற்குச் சென்றாள். கையில் கொண்டுவந்த பழங்களை அன்னை அறையில் வைத்து நமஸ்கரித்து எடுத்துவந்தாள். இத்தனை வருடப் பழக்கத்தில் அவள் அந்த அறைக்குப் போனதோ, வணங்கியதோகூட இல்லை. இன்று அவள் செயல் எல்லோர்க்கும் வியப்பளித்தது.

அவள் அங்கிருந்த நான்கு நாட்களும் வசந்தியின் குழந்தை-களுடன், அவர்கள் தேவைகளைக் கவனித்து, விளையாடி, பாடம் சொல்லிக்கொடுத்து மகிழ்வுடனிருந்தாள்.

''வசந்தி, இன்று உன்னை நான் புதிதாய்ப் பார்க்கிறேன்'' என்று விடைபெறும்போது கூறினாள் சாந்தினி. வசந்தியோ, ''நான் எப்போதும்போல்தானிருக்கிறேன்'' என்றாள்.

''ஆம் வசந்தி! நீ எப்போதும்போல்தான் இருக்கிறாய். ஆனால், நான் இப்பொழுதுதான் உன்னை, உன்னில் உறையும் அன்னையைப் பார்க்கிறேன். எந்த நேரமும் நீ கடவுள் நினைவாக இருந்திருக்கிறாய். ஆனால், என்னை நீ எதற்கும் வற்புறுத்தியதில்லை. உன்னைச் சார்ந்து, உன்னிடமுள்ள அன்னையைப் பெற்று, என்னுள் புதைந்து இருந்த திறமைகள் வளர்ந்து, சிறப்பாகச் செயல்பட்டிருக்கின்றன. அதை நான் உணர்ந்திலேன். இப்பொழுது என் செயல் என்று ஒன்றும் இல்லை என்றுணரவே இந்த மகப்பேறு மருத்துவம் எனக்கு நேர்ந்தது. அப்போது எனக்கு உடனே உன் நினைவுதான் வந்தது. என்னில்

உள்ள ஒன்று உன்னுள் உள்ள அன்னையுடன் தொடர்புகொண்டு செயல்பட்டதை இத்தனை நாளும் நான் உணர்ந்தேனிலேன்''.

விடை பெறும்போது வசந்தி சில புத்தகங்களை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தாள். தான் உணரும்வரை அன்னை காத்து இருந்தார்என்பதை சாந்தினி உணர்ந்துகொண்டாள்.

இடைப்பட்ட நாட்களிலிருந்த சோர்வு சுத்தமாக நீங்கிவிட்டது. பழைய உற்சாகத்துடன் தன் பணிகளில் கலகலப்பாய் ஈடுபட்டாள்.

பெற்றோருடன் இருந்து வந்ததில் ஆறுதலாகிவிட்டாள்என்று மாமியார் வீட்டினர் நினைத்துக்கொண்டனர்.

தங்கள் அறையில் சின்னஞ்சிறு பாதங்கள் பொறித்த படம் ஒன்றைப் புதிதாக மாட்டியிருந்தாள். தினமும் காலையிலும், இரவிலும் அதற்கு நறுமண ஊதுபத்தியை ஏற்றி, மௌனமாகக் கண்ணை மூடி நிற்பாள். அவளின் இந்தப் புதிய செயல் வாசுவுக்கு மட்டுமே தெரியும். அவன் உள்ளூரச் சிரித்துக்கொண்டான்.

தினமும் சில நிமிஷங்களாவது புத்தகம் படிக்கும் பழக்கம் அவளுக்குண்டு. ஆனால், அதை ஓய்வு நேரங்களில் மட்டுமே செய்வாள். ஆனால், இப்போதெல்லாம் விடியற்காலையில் படித்தாள். அது என்ன புத்தகம்என்று பார்த்தான். 'தி மதர்' என்றிருந்தது. தாய்மையைப் பற்றிய ஏதோ புத்தகம்என்று எண்ணிக்கொண்டான்; புரட்டியெல்லாம் படிக்கவில்லை. சில தினங்கள் கடந்து சாந்தினிக்குத் திடீர் திடீரென தலைசுற்றல்; வேலைக்குப் போகவும் முடியவில்லை.

டாக்டரிடம் போவதுஎன்று முடிவாகி, குடும்பத்தோடு போனார்கள். அவளுக்கு என்னவோ, ஏதோஎன்று எல்லோர்க்கும் கவலை.

அவளைப் பரிசோதித்த டாக்டர் மலர்ச்சியாக வந்தார். ''சந்தோஷமான செய்திதான். அவள் கருவுற்றிருக்கிறாள்'' என்றார்.

எல்லோருக்கும் முகத்தில் வியப்புடன் கூடிய மகிழ்ச்சி. அவள் மிக இயல்பாக இருந்தாள்.

எளிதாகக் கிடைக்கும் ஒன்றின் அருமை நாமறியாதது. அதுவே



அரிதிற் கிடைப்பதாயின் அதன் அருமையைப் போற்றுவோம். சாந்தினி பேறுற்ற செய்தி அவள் வீட்டார்க்கு அருமையான ஒன்றானது. மேலும், அவள் உயிர் பிழைக்க வேண்டுமேஎன்ற கவலை ஒரு புறம்.

சாந்தினி எவ்வித அச்சமுமின்றி இயல்பாக இருந்தாள். இரவிலும், காலையிலும் தியானம் செய்கிறாள். இது வாசுவுக்கு மட்டுமே தெரியும். ஏதோ ஒரு பாதங்களின் படம் வைத்திருக்கிறாள். ஒருவேளை தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் பாதங்களை அதில் பார்க்கிறாளோ, தெரியவில்லை. அவள் கருவுற்றது வாசுவுக்கு ஒரு புறம் மகிழ்ச்சி; அவள் உயிருக்கு உத்திரவாதமில்லை என்ற டாக்டர்களின் எச்சரிக்கைக் குறித்து ஒரு புறம் அச்சம். அவன் முக பாவனையிலிருந்து சாந்தினி அதைப் புரிந்துகொண்டாள்.

''நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரிகிறது. அப்படி எல்லாம் எதுவும் ஆகாது. நானிப்படி நிச்சயமாய் சொல்வதற்கு ஒரு காரணம் உண்டு. அதை நான் மகவீன்ற பிறகு சொல்வேன்'' என்றாள்.

நாளாக, நாளாக அவள் புதுப் பொலிவுடன் திகழ்கிறாள். அவள் கருவைப் பரிசோதிக்கும் டாக்டர்கள் நல்ல முறையில் கரு வளர்வதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே ஒழுங்கும், கட்டுப்பாடும் உள்ள அவள், இப்போது அன்னையின் அருளையும் பெற்று அகமும், புறமும் மலர்கிறாள்.

ஒரு பொன்னான வைகறைப் பொழுதில் அழகிய பெண்மகவை ஈன்றாள். புத்தம் புது ரோஜாப்பூப் போன்ற அதன் மலர்ச்சியையும், எவ்வித ஆபத்திற்கும் ஆளாகாத அவள் உடல் நிலையையும் பார்த்து எல்லோருமே வியந்தனர். அவளுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர், ''உங்கள் மருமகளுக்கு ஏதோ அற்புதம் நிகழ்ந்திருக்கிறது'' என்று வியந்தார்.

வாசு அவளிடத்தில் தனிமையில், ''சாந்தி, மகவீன்ற பின் சொல்வதாகச் சொன்னாயே, அது என்ன?'' என்று மிகுந்த ஆர்வத்துடன் கேட்டான். 'அன்னையை ஒரு கணம் நினைத்தால், உனக்குப் பரிசு தருவார்' என்ற வசந்தியின் வார்த்தையையும், அவளைப் பற்றியும்

இப்போது சொன்னாள். தங்கள் அறையில், தான் வைத்திருந்த திருப்பாதங்கள் அன்னையின் பொற்பாதங்களென்றும், அவற்றின் மகிமைபற்றியும் கூறினாள்.

அம்மா விரும்பிய பக்தி அவளிடம் குழந்தையின் வடிவில் வந்தது என அவன் எண்ணினான்.

குழந்தைக்கு வசந்தமீரா என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்-தாள். அன்னையின் திருவருளே அக்குழந்தை என்பதால், அசாதாரண குழந்தையாய், ஒவ்வொன்றிலும் விரைவாக முன்னேறியது. சாந்தி, தன் குழந்தையில் அன்னையையே தரிசித்தாள்.

'என்ன அதிசயமான குழந்தை இது' என்று எல்லோரும் வியந்தனர். அதன் ரகசியம் அவளே அறிவாள்.

தான் கருவுறுவது நிச்சயம் என்ற நம்பிக்கையுடன், கருவுற்ற காலத்தில் தானெவ்வாறு இருக்க வேண்டும் என்பதை (''பிறக்கப் போகும் குழந்தையின் இயல்பு அதிக அளவுக்கு அதை உருவாக்கும் தாயைப் பொருத்திருக்கும். அவள் வாழும் தூலச் சூழ்நிலைகளின் அளவிற்கு அவளுடைய ஆர்வத்தையும், இச்சா சக்தியையும் பொருத்-ததாக இருக்கும். அவள் கற்க வேண்டிய கல்வியிது. அவளுடைய சிந்தனைகள் எப்போதும் அழகானவையாகவும், தூயதாகவும் இருக்க வேண்டும்; அவளுடைய உணர்ச்சிகள் உயர்ந்தவையாகவும், பண்பு நயமுடையவையாகவும் இருக்க வேண்டும்; இத்துடன் அவளால் எண்ணிப் பார்க்க முடிந்த அளவு மிகவுயர்ந்த இலட்சியத்தின்படி குழந்தையை உருவாக்க வேண்டும்என்ற திட்டவட்டமான உணர்வுள்ள இச்சா சக்தியும் அவளிடம் இருக்குமானால், அப்பொழுது அக்குழந்தை அதிகபட்ச வாய்ப்புகளுடன் இவ்வுலகில் வந்து பிறப்பதற்கு வேண்டிய மிகச் சிறந்த நிலைமை அளிக்கப்பட்டதாகும்'' என்ற அன்னையின் அருளுரைகளை) வசந்தி சொல்லியிருந்தாள். அதைத் தான் ஏற்றதன் விளைவே இக்குழந்தை.

வசந்த மீராவின் பிறப்பிற்கு நன்றி சொல்ல குலதெய்வம் கும்பிட இவள் மாமியார் ஆசைப்பட்டாள். சாந்தி மறுத்துவிட்டாள். தன்



பக்தியால்தான் அவளுக்குக் குழந்தை பிறந்ததுஎன்று அவள் மாமியார் எண்ணினாள். எனவே, அவள் மறுத்தது அவளுக்கு வருத்தம். ஆறு வயது சிறுமியான தன் பெயர்த்தியிடம் அவள் தன் குறையை எல்லார் முன்னிலையிலும் கூறினாள். குழந்தை கூறிய பதில் யாவரையும் அதிர வைத்தது. ''நானே என் அம்மா வழிபட்ட தெய்வம். நீ வேறு யாரை கும்பிட வேண்டும் என்கிறாய்?'' என்று கூறிய குழந்தையில் சாந்தினி அன்னையைத் தரிசித்தாள். நன்றியால் நெகிழ்ந்து குழந்தையை பக்தியுடன் பார்த்தாள்.

வாசு, தன் அம்மாவிற்கு, சாந்தினி பொங்கல் விடுமுறையில் பிறந்தவீடு சென்றபோது வசந்தி கூறியதை எடுத்துச் சொன்னான்.

தன் மருமகளின் பக்தி, நம்பிக்கை, அதன் விளைவாய் அவள் பெற்ற அற்புதக் குழந்தை என்பதை உணர்ந்துவிட்டதால்,

''சாந்தி! இக்குழந்தையை அன்னை உனக்காக மட்டும் தரவில்லை. உன் கடவுள் பக்தி குறித்து நான் வருந்தி குறைபட்டதைப் போக்கவும்தான் கொடுத்திருக்கிறார்'' என்றாள் சாந்தினியின் மாமியார்.

*முற்றும்.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மலரும் மனத்தின் எண்ணங்களும், உணர்வுகளும் அபரிமிதமான அதிர்ஷ்டத்தை அளவுகடந்து உற்பத்தி செய்ய முடியும்.

***உயர்ந்த மனம் கீழே வந்து தாழ்ந்த ஜடத்தில் சிருஷ்டிப்பதால் செயல் அபரிமிதமாக உபரியாகும்.***

# அறிவாக மாறும் அனுபவம்

கர்மயோகி

- உடல் செய்வது செயல்.

  உடலின் செயலை உணர்வது அனுபவம்.

  உணர்வது உயிர், பிராணன் எனக் கூறுவர்.

  அனுபவம் இனிமையானால் அடுத்த முறை தேடும்.

  அனுபவத்தைத் தேடுவது ஆனந்தத்தைத் தேடுவதாகும்.

  ஆனந்தத்தைத் தேடும் அனுபவம் அறிவு.

  செயல் அனுபவமூலம் அறிவாக மாறியபின் மீண்டும் மீண்டும் அதை நாடி அனுபவித்துத் திளைப்பது வாழ்வு.

  பெற்ற அனுபவத்தைவிடப் பெரிய அனுபவம் வரும்வரை அறிவு அவ்வானந்தத்தைத் தேடியபடியிருக்கும்.

  அறிவு ஆனந்தத்தைத் தேடும் பாங்கு ஆர்வம்.

  அறிவும், ஆனந்தமும் திறமையைத் தரும்.

  திறமை வாழ்வின் திண்மை.

- ஒருவர் தாம் பெற்ற அறிவைப் பாராட்டுவது அவருடைய விவேகம்.

- இளமை இனிமையானது.

  இளமையின் இனிமை இதமாக இதயத்தில் சேரும்.

  சுயநலம் சுவைக்கும்.

  சுயநலம் தன்னைச் சுயநலமாக அறியாது.

  சுயநலம் சுயநலத்தைமட்டும் அறியும்.

  பிறரை அறிய முடியாத சுயநலம், சுயமான நலம்.

  சுபாவமான சுயநலம் தன் சொரூபத்தை அறியாது.

  உலகை மறந்து தன்னில் திளைப்பது சுயநலம்.

  வளரும் சுயநலம் வாழும் சுபாவம்.



சுயநலம் சுடும்.

முடிவாகத் தன்னையே சுடும்.

சுடும்வரை சுயநலம் தன்னையறியாது.

சுட்ட பின்னும் சுயநலம் சுவைக்கும்.

சுயநலம் பரநலமாகாது.

சுயநலமும், சுயநலத்திற்காகப் பரநலம் பேணுவது மாற்றம், அதிசயமான முன்னேற்றம்.

ஆசை சுயநலத்தின் கருவி.

அதிகாரம் சுயநலத்தின் சொந்தமான சுய உரிமை.

ஆசை பூர்த்தியாக சுயநலம் அதிகாரம் செய்யும்.

அதிகாரம் செல்லாவிட்டால், எதிராக மாறும்.

காரணமின்றி வெறுப்பை உணர்வது சுயநலம்.

சுயநலம் அறியாத உணர்வு வெட்கம்.

ஆசை வெட்கமறியாது; சுயநலம் அடியோடு அறியாது.

சுயநலம் பூரணம் பெற்றால் பூரித்துப் புளகாங்கிதமடையும்.

*அது சுயநலத்தின் புளகாங்கிதம்.*

*புளகாங்கிதம் புல்லரிக்கும்.*

உலகம் தன்னை உயர்வாக நினைக்க விழைவது சுயநலம்.

அதை உலகில் பரநலமாக சுயநலம் அறியும்.

தனக்குச் செய்யும் சேவையே சுயநலத்திற்குச் சேவை எனப்படும்.

எனவே சேவை அதன் இலட்சியமாகும்.

உலகம் சுயநலத்தைக் கடந்து பல காலமாகிவிட்டது.

எனினும் சுயநலமற்ற மனிதர் அரிது.

சுயநலம் விரும்பும் தன்மை கயமை.

சுயநலம் பரநலமாக உலகம் மாறவேண்டும்.

உலகம் மாறாமல் மனிதன் மாறமாட்டான்.

உலகம் மாறாமல் மாறும் மனிதன் இலட்சியவாதி.

இலட்சியவாதி பெறுவது அலட்சியம்.

உலகை விட்டு ஒதுங்காமல் இலட்சியம் உயிர் பெறாது.

ஒதுங்குபவன் ஒதுக்கப்படுவான்.

ஒதுங்குபவன் எண்ணம் ஓங்க உலகை ஆதரவால் எதிர்க்க வேண்டும்.

ஆதரவால் எதிர்க்க ஆதரவை இழந்தவனால்தான் முடியும்.

ஆரம்பத்திலிருந்தே ஆதரவை இழந்தவனை உலகம் ஆதரிக்கும்.

ஆதரவற்றவர் உலகில் அதிகம் பேர்.

அன்பை இழந்தவர் ஆதரவற்றவர்.

விலக்கப்படுவது தாழ்த்தப்படுவது.

விலக்கப்படுவது இழிவு.

மனதால் விலக்கப்பட்டவர் ஆதரவை அதிகமாக இழந்தவர்.

அன்புக்குரியவர் விலக்குவது கொடுமை.

கொடுமைக்குச் சிறுமையுண்டு.

ஆதரவையிழந்து கொடுமையால் சிறுமையடைந்தவர் உலகை ஆள முடியும்.

பிரபலம் பிறர் பலம்.

பலமிழந்தவர்க்குப் பிறர் பலம் பிரபலமாக வரும்.

பலமற்றவர் பலமானவரை ஆள்வது மக்களாட்சி.

மக்கள்பலம் மன்னன் பெற்ற மன்னராட்சி.

மன்னராட்சி மக்களாட்சியானபின் பலமிழந்தவர் பலம் பெற்றார்.

அன்பையும், ஆதரவையும் இழந்தவர் பெற்ற ஆட்சி மக்களாட்சி.

மக்களாட்சியின் தர்மம் ஆண்டவனின் தர்மம்.

அநியாயம் ஆண்டவனின் நியாயம்.

அநியாயம் நியாயமாவது மன்னராட்சி மக்களாட்சியாவது.

மன்னர் நியாயம் மக்களுக்கு அநியாயம்.

ஆண்டவன் அநியாயத்தை நியாயமாக்குவது மக்களாட்சி.



காலம் மாறினால் காலன் ஆள்வான்.

காலன் மரணத்தின் தலைவன்.

காலன் ஆண்டால் மரணமடைவது அநியாயம்.

அழியும் அநியாயம் நியாயத்தையும் அழிப்பதுண்டு.

அழிவது அநியாயம்.

அழியாதது நியாயம்.

நேற்று நிலையானது இன்றழியும்.

இன்று நிலையானது நாளையழியும்.

ஆண்டு அழிவது நியாயம் ஆட்சி பெறுவது.

சத்தியம் அழியாது.

பொய் நிலைக்காது.

ஆட்சி செய்த பொய், அழிவது நியாயம்.

பயம் தருவது பொய், அழிய வேண்டியது.

சுகம் தருவது மெய், வளர வேண்டியது.

கோபம் இயலாமை.

இயலாமை காயும்.

வலிமைக்கு இனிமையுண்டு.

வலிமைக்குக் காய்ச்சலில்லை.

வேகமும், தீவிரமும் காய்ச்சலுக்குண்டு.

வலிமையான இனிமைக்கு நிதானமுண்டு.

நிதானம் நியாயமானது.

மனம் நாடுவது நியாயம்.

இலட்சியம் நியாயமானது.

உலகம் நாடுவது வசதி; நியாயமில்லை.

நியாயத்தை நாடுபவன் உலகத்தை ஏற்க முடியாது.

நியாயத்தை உலகம் ஏற்றால் மனம் இலட்சியம் பெறும்.

உலகமும், நியாயமும் ஒத்துப்போனதில்லை.

உலகம் நியாயத்தை ஏற்க இலட்சியவாதி அநியாயத்தை நியாயமாக ஏற்க வேண்டும்.

அநியாயத்தின் நியாயம் புரியாதவரை இலட்சியத்தை உலகம் அலட்சியம் செய்யும்.

அநியாயத்தின் நியாயத்தை ஆண்டவனே ஏற்பதால் அதை ஏற்பது ஆண்டவனை ஏற்பதாகும்.

அதை ஏற்கப் பொறுமை பூணவேண்டும்.

பொறுமை ஆண்டவனின் பெருமை.

பொறுமை பெறவே புவியில் பிறந்தோம்.

உடல் பெறாத பொறுமையை மனம் பெற்றுத் தரும்.

மனமும் பெற முடியாததை ஆத்மா பெற்றுத் தரும்.

ஆத்மா அநியாயத்தில் நியாயமாக மலரும்.

பொறுமை பொக்கிஷம்.

ஆண்டவன் மனிதனில் மலர்வது பரிணாமம்.

ஆண்டவன் மனிதனானது சிருஷ்டி.

சிருஷ்டி பரிணாமமாவது ஆத்மா வாழ்வில் மலர்வது.

சுயநலம் பரநலமாவது மனிதன் ஆண்டவனாவது.

சுயநலம் உணர்ந்து பரநலமாக மலர விழைவது சிருஷ்டி பரிணாமமாக மாறுவது.

சுயநலம் ஆண்டவனின் நியாயம்.

அது அநியாயம். அதைப் பிறரிடம் ஏற்பது ஆண்டவனின் நியாயம்.

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# டிரான்ஸ்பர் ஆர்டர்

திட்டு அதிர்ஷ்டத்திற்கு டிரான்ஸ்பர் ஆர்டர்என்பது எனக்குப் பிடித்தமான சொல். மாமனும், மைத்துனனும் ஒரு கம்பனியில் வேலை செய்தனர். மாமன் செல்வாக்கு நிறைந்தவர். ஏனோ மாமனுக்கு மைத்துனன் மீது காய்ச்சல். தனக்குக் கீழ் மைத்துனன் வேலை செய்வதால் அவனை அலட்சியப்படுத்துவார். மாமன் இராசியுள்ளவர். M.L.A., மந்திரி, I.A.S. ஆபீசர்கள் இவருக்கு வேண்டியவர்கள். நெருங்கிப் பழகுபவர்கள். அனைவரும் 'இவரைப்' பற்றிப் பேசுவார்கள். சீக்கிரம் பெரிய மனிதனாகிவிடுவார்என்று பேச்சு அடிபட்டது. M.L.A.ஆக நிறுத்த முயன்றனர். சந்தர்ப்பம் ஒத்துவரவில்லை. இவர் வேலை செய்யும் சூழல் அதிர்ஷ்டமானது. இவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை மைத்துனன் மீது காட்டினார்; அளவுகடந்து காட்டினார். மைத்துனன் வாய்மூடி மௌனமாக இருந்தான். ஆனால் இவர் தொடர்புகளையும், செயல்களையும் கவனித்து வந்தான். எலக்ஷன் வந்தது. இவர் மூலம் ஏற்பட்ட தொடர்புகளைப் பயன்படுத்தி எலக்ஷனில் நின்றான்.

- ★ M.L.A. ஆகிவிட்டான்.
- ★ அடுத்த பீரியடில் மந்திரியும் ஆனான்.

**திட்டு இவருக்கு வந்த அதிர்ஷ்டத்தை மாற்றி மைத்துனனுக்கு அளித்தது.**

**திறமைக்குப் பலன் வரவேண்டுமானால், குணம் வேண்டும்; சாந்தம் வேண்டும்.**

❀❀❀

# ஜாக் கேன்ஃபீல்ட்

அமெரிக்கர் சராசரி வருமானம் ஆண்டிற்கு $ 40,000 உள்ள பொழுது $ 8,000 சம்பாதிப்பவர். முன்னுக்கு வர ஆசை. புத்தகம் எழுதினார். பெரும்பலனில்லை. மேடையில் பேசுவார். அப்படியெல்லாம் கிடைத்ததுதான் இந்த வருமானம். கொஞ்ச நாளைக்கு முன் The Secretயைப்பற்றிக் கேள்விப்பட்டார். எளிதில் நம்பிக்கை வரவில்லை. அவர்கள் முறையைப் பின்பற்றினார். வருமானம் $ 18,000ஆக உயர்ந்தது. சற்று பிடிப்பட்டது. பொதுவாக ஒரு முறை பிரபலமானால் பின்பற்றுவார்கள், சொல்வதைப் பின்பற்றமாட்டார்கள். அதைத் தங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்வார்கள்.

இவருக்கு $ 1 மில்லியன் சம்பாதிக்க ஆசை. மில்லியன்என்பது ஆயிரம் ஆயிரம். 8 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரத்திற்கு வந்தபின் 50 மடங்கு உயர முனைந்தார். இதற்குத் தம் வாழ்வில் ஏதாவது உதவியாக இருக்குமாஎனக் கருதினார். இவர் எழுதிய புத்தகத்தை National Inquirer நேஷனல் இங்க்கொயரர் என்ற பத்திரிக்கை விமர்சனம் செய்தால் நடக்கும்எனப்பட்டது. மீண்டும் Secret முறைகளைக் கடைப்பிடித்தார். அவற்றில் ஒன்று செக் எழுதுவது. $ 1 மில்லியனுக்கு செக் எழுதினார். ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது. ஒரு நாள் மேடையில் பேசி முடித்தவுடன் நேஷனல் இங்க்கொயரர் நிருபர் இவரை அணுகி, ''எங்கள் பத்திரிகையில் எழுதுங்கள்'' என்றார். அவரது ஆழ்ந்த ஆசை நிறைவேறியது.

- ❍ **அப்பத்திரிக்கை இவர் புத்தகத்தைப் பிரபலமாக்கியது.**
- ❍ **புத்தகம் ஏராளமாக விற்றது.**
- ❍ **சில ஆண்டுகளில் இவர் $ 1 மில்லியன் பெற்றார்.**
- ❍ **Secret இவரது ஆசையை நிறைவேற்றியது.**

❀❀❀

February 2008 Jiviyam 13 Malar 10
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடு

கர்மயோகியின்

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்**

*தமிழாக்கம்:* என். அசோகன் ரூ.100/-

**LECTURES ON SRI AUROBINDO'S THE LIFE DIVINE**

**Garry Jacobs** ரூ.150/-

**SATYA JYOTHI**

**(CONCISE TRUISMS)**

**N.Asokan** ரூ.200/-

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

கிடைக்குமிடம்

பாண்டியில்
**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
**மாம்பலம் தியான மையம்,**
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191